விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 181 வள்ளுவர் ஆண்டு 2056 ஆனி 04 புதன்கிழமை (18.06.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829








## பருத்தித்துறை நகர சபை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வசம்

### நகர பிதாவாக டக்ளஸ் போல் தெரிவு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை நகர சபை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வசமானது.

பருத்தித்துறை நகர சபையின் தவிசாளர் மற்றும் பிரதித் தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் நேற்று பருத்தித்துறை நகர சபை சபா மண்டபத் 15ஆம் பக்கம் பார்க்க

ஒரு வாக்கு வித்தியாசத்தில்

## கரவெட்டி பிரதேச சபை தமிழரசுக் கட்சி வசம்



### தவிசாளராக சுரேந்திரன் தெரிவு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி தென்மேற்கு (கரவெட்டி) பிரதேச சபையை ஒரு வாக்கு வித்தியாசத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி கைப்பற் 15ஆம் பக்கம் பார்க்க

யாழில் உணவு அருந்திவிட்டு

## மயக்கமுற்ற 20 வயது இளைஞன் உயிரிழப்பு


(யாழ்ப்பாணம்)

யாழில் உணவு அருந்திவிட்டு மயங்கிவிழுந்த 20 வயது இளைஞன் ஒருவர் நேற்று மரணமடைந்துள்ளார்.

இதில் கந்தர்மடம் பழைய புகையிரத நிலைய வீதியைச் சேர்ந்த கேதீஸ்வரன் எனோ அசாந் (வயது-20) என்றஇளைஞனே 15ஆம் பக்கம் பார்க்க

# மண்டைதீவு படுகொலை விசாரணையை முன்னெடுங்கள்

### பாராளுமன்றத்தில் சிவஞானம் சிறீதரன்



(கொழும்பு)

மண்டைதீவு செம்பாட்டுத் தோட்டம் தோமையார் தேவாலயப் பகுதியிலுள்ள மனிதப் புதைகுழி தொடர்பில் விசாரணைகளை முன்னெடுங்கள் என நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவிடம் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் வலியுறுத்தியுள்ளார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

நெடுந்தீவில்

## இரத்தவாந்தி எடுத்த குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - நெடுந்தீவுப் பகுதியில் இரத்தவாந்தி எடுத்த குடும்பஸ்தர் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்று மரணமடைந்துள்ளார்.

இதில் நெடுந்தீவு 3ஆம் வட்டாரம் பகுதியைச் சேர்ந்த 15ஆம் பக்கம் பார்க்க

## முன்னாள் ஜனாதிபதிகளுக்கான சிறப்புரிமைகள் இரத்து

### எம்.பிக்களுக்கான ஓய்வூதியம் நிறுத்தம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதிகளுக்கான சிறப்புரிமைகள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வூதியங்களை இரத்துச் செய்ய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் நேற்றுக் கலந்து கொண்டபோது அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ இதனைத் 16ஆம் பக்கம் பார்க்க

பருத்தித்துறை பிரதேச சபையின்

## ஆட்சியைக் கைப்பற்றியது இலங்கை தமிழரசுக் கட்சி

### தவிசாளராக உதயகுமார் யுகதீஸ் தெரிவு



(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பிரதேச சபையின் ஆட்சியை இலங்கைத் தமிழரசுக் கட்சி கைப்பற்றிய தோடு அதன் தவிசாளராக உதயகுமார் யுகதீஸ் போட்டியின்றி ஏகமனதாகத் தெரிவானார். 15ஆம் பக்கம் பார்க்க

அரியாலையில்

## ரயில் மோதியதில் இளைஞன் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

அரியாலை புங்கங்குளம் புகையிரதத் தண்டவாளத்தில் இருந்த இளைஞர் ஒருவர் புகையிரதம் மோதியதில் உயிரிழந்துள்ளார். 16ஆம் பக்கம் பார்க்க

## யாழ்ப்பாணம் பலாலி வீதி இரவு 7 மணி வரை திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பலாலி வீதி போக்குவரத்திற்காக இரவு ஏழு மணி வரை திறக்கப்பட்டிருக்கும் என தேசிய மக்கள் சக்தியின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் தலைமையில் நடைபெற்ற பாதுகாப்பு அமைச்சின் கூட்டத்தில் தான் கலந்து கொண்டிருந்தவேளை, ஜனாதிபதியிடம் முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாக வீதி இரவு 7 மணிவரையில் திறந்திருக்கும் எனத் தெரிவித்தார். 16ஆம் பக்கம் பார்க்க

சாவகச்சேரியில்

## கிணற்றுக்குள் தவறிவீழ்ந்த 6 வயது சிறுமி பலி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரப் பகுதியில் கிணற்றுக்குள் தவறி வீழ்ந்த 6 வயதுச் சிறுமி ஒரு 15ஆம் பக்கம் பார்க்க

ஈரான் - இஸ்ரேல் மோதல்

## பெண்கள், குழந்தைகள் உட்பட 220 பேர் பலி

(தெஹ்ரான்)

ஈரான் - இஸ்ரேல் மோதல் காரணமாக பெண்கள், குழந்தைகள் உட்பட 220க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இஸ்ரேலும் ஈரானும் தொடர்ந்து 5ஆவது நாளாக ஏவுகணைத் தாக்குதலை 16ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரித்தானியத் தூதுவருடன் சுமந்திரன் சந்திப்பு



(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான பிரித்தானியத் தூதுவரை இலங்கை தமிழரசுக் கட்சியின் பதில் செயலாளர், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ சுமந்திரன் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விடுதி ஒன்றில் நேற்று செவ்வாய்க்கிழமை குறித்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

எதிர்வரும் மனித உரிமை பேரவைக் கூட்டத் தொடர் சம்பந்தமாக நீண்ட உரையாடலில் ஈடுபட்டதாக சுமந்திரன் தனது சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார். (ம-4,7,33)


**ஊர்காவற்றுறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து), ஊர்காவற்றுறை**

ஊர்காவற்றுறை ப.நோ.கூ. சங்கத்திற்குச் சொந்தமான, ஊர்காவற்றுறை பிரதான வீதியில் அமைந்துள்ள ஐந்து கடைத் தொகுதிகளில் ஐந்தாம் இலக்க கடை வாடகைக்கு விடப்படும். தேவையானவர்கள் சங்க அலுவலக நேரத்தில் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று பூர்த்தி செய்து விண்ணப்பிக்கவும்.

விண்ணப்ப முடிவுத் திகதி : 25.06.2025

குறிப்பு : அலுவலக நேரம் (கிழமை நாட்களில் காலை 8.30 மணி – மாலை 5.00 மணி வரை)

தொலைபேசி இல. : 021 221 1648

பொது முகாமையாளர்,
ஊர்.ப.நோ.கூ.சங்கம்,
ஊர்காவற்றுறை.

(C-3217)


## போர் சூழ்நிலை காரணமாக

# ஈரான் தெஹ்ரானில் உள்ள இலங்கைத் தூதரகம் அகற்றம்

மத்திய கிழக்கில் நிலவும் போர் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, ஈரானின் தெஹ்ரானிலுள்ள இலங்கைத் தூதரகத்தை அங்கிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

வேறு ஒரு இடத்திலிருந்து அதன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அமைச்சர் தெரிவித்தார். மத்திய கிழக்கில் நிலவும் போர் சூழ்நிலை காரணமாக நான்கு இலங்கையர்கள் காயமடைந்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

அவர்களில் ஒருவரின் நிலை மோசமாகவுள்ளதுடன், மற்றைய மூவரின் நிலை மோசமாக இல்லை என்றும் கூறப்படுகிறது.

இருப்பினும், காயமடைந்த அனைவரும் இஸ்ரேலில் பணிபுரியும் இலங்கையர்கள் என்பதுடன், அவர்கள் தொடர்பாகத் தேவையான நடவடிக்கைகளை ஆராய தூதரகம் தலையிட்டு வருகிறது என்றும் அமைச்சர் கூறினார்.

மத்திய கிழக்கில் நிலவும் போர் சூழ்நிலை காரணமாக பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது அவர் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார்.

சுமார் இருபதாயிரம் இலங்கையர்கள் இஸ்ரேலில் பணிபுரிவதாகவும், 35 இலங்கையர்கள் ஈரானில் தங்கியிருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

அவர்களில் 8 பேர் ஈரானியர்களை மணந்தவர்கள் என்றும் அமைச்சர் கூறினார்.

இஸ்ரேல் மற்றும் ஈரானில் வசிக்கும் இலங்கையர்களை அந்நாடுகளிலுள்ள தூதரகங்கள் மூலம் வெளியுறவு அமைச்சு, தொடர்ந்து விசாரித்து வருவதாகவும் அமைச்சர் கூறினார்.

நாங்கள் தற்காலிகமாக இஸ்ரேலில் வேலைக்கு அனுப்புவதை நிறுத்திவிட்டோம். விடுப்பில் இருப்பவர்கள் திரும்பிச் செல்லவும் தற்போதைக்கு வாய்ப்பில்லை. விசாக் காலத்தை நீடிக்குமாறு கோரியுள்ளோம்.

அதைச் செய்ய முடியும் என்று நாங்கள் நம்புகிறோம். இந்த நேரத்தில் இஸ்ரேலுக்குச் செல்வதும் ஆபத்தானது. இஸ்ரேலுக்குச் சென்ற 10 பேர் துபாய் விமான நிலையத்தில் இருந்தனர். அவர்களை மீண்டும் இலங்கைக்கு அழைத்து வர ஏற்பாடு செய்தோம்.

இஸ்ரேலில் பணிபுரிபவர்களை இந்த நாட்டிற்கு அழைத்து வர விமானம் அனுப்புவது கடினமான பணியாகும். இருப்பினும், சூம் தொழில்நுட்பம் மூலம் தூதர்களுடன் நாங்கள் தொடர்ந்து தொடர்பில் இருந்து தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளோம் என்றார். (ம-4,7)

# எதிர்க் கட்சியினரின் கீழ்த்தரமான நடவடிக்கையை சஜித் கட்டுப்படுத்த வேண்டும்

## சபைமுதல்வர் பிமல் ரத்நாயக்க

எதிர்க்கட்சியின் ஒருசில உறுப்பினர்களின் கீழ்த்தரமான நடவடிக்கைகளை கட்டுப்படுத்த வேண்டிய பொறுப்பு எதிர்க்கட்சித் தலைவருக்கு உண்டு. அவ்வாறு செயற்படாவிடின் அவர் பதவியில் இருப்பது பயனற்றது. எவ்வாறு இருப்பினும் அவரையே எதிர்க்கட்சித் தலைவராக வைத்துக் கொள்வோம் என சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை (17) நடைபெற்ற அமர்வின் போது மேலதிக கேள்விக்கு அனுமதி மறுக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் சபையில் இருந்து வெளியேறினர்.

இதன்போது உரையாற்றுகையில் சபை முதல்வர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது,

பாராளுமன்றத்தில் சண்டித்தனமாக செயற்படுவதற்கு எவருக்கும் இடமளிக்க முடியாது. பாராளுமன்றத்தின் கௌரவம் மற்றும் கோட்பாடுகளைக் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்குண்டு. மிளகாய்த் தூள் தாக்குதல் நடத்த இடமளிக்க முடியாது.

எதிர்க்கட்சிகளின் ஒருசில உறுப்பினர்களின் கீழ்த்தரமான செயற்பாடு மற்றும் நடத்தைகள் வெறுக்கத்தக்கது. இவ்வாறான செயற்பாடுகள் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் விசேட கவனம் செலுத்த வேண்டும் என்றார். (ம-4,7)


# மரண அறிவித்தல்



## வேலுப்பிள்ளை வேதநாயகி

வரணியைப் பிறப்பிடமாகவும் பழையகமம் முரசுமோட்டையை வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை வேதநாயகி அவர்கள் 15.06.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரநாதர் - சிலம்பாச்சி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை, ஞானசேகரம், மாணிக்கவாசகர், சிவகாமிப்பிள்ளை மற்றும் காசிநாதர்(கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் இராஜேஸ்வரி, யோகம்மா, நீலலோஜினி (விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர் கண்டாவளை), கருணாநந்தி(கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் காலஞ்சென்றவர்களான முத்துப்பிள்ளை, வேலுப்பிள்ளை, சித்தர், குழந்தைநாச்சி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சுதர்சினி(கனடா), யசிந்தா(கனடா), சதீஸ்(கனடா), காஞ்சனா(ஜேர்மன்), விஜிந்தன்(கனடா), நிசாந்தன் (பிரான்ஸ்), றஜிந்தன்(கனடா) காலஞ்சென்றவர்களான சுசிந்தன், மகிந்தன் மற்றும் துஜீவன் (லண்டன்), குபிதா (முரசுமோட்டை), யதுஷா(கனடா), யதுஷன் (கனடா) ஆகியோரின் பேர்த்தியும் அஸ்சிதா, பிரவின், பிரசாந், அச்சிதா, அஸ்பிகா, அசாரா, பிந்துசான், அஜய், ஆரணன், அகர்வின், அஜிசன், அஜினிகா, அருஷ்வின், கிருஷ்வின், ஆதித்தியன், ஐரா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 18.06.2025 புதன்கிழமை மு.ப 9.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஐயன் கோவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்

(C-3220)



# கண்ணீர்ப் பூக்கள்



மண்ணில் 19 - 03 - 1962

விண்ணில் 16 - 06 - 2025

**திருமதி சகாயராஜா பரமேஸ்வரி (விசியா)**

பிறப்பும் இறப்பும் இயற்கை நியதி
எனினும் உங்கள் இழப்பை எம்மால்
உள்வாங்க முடியவில்லை
சிந்தையிலே இனித்திருக்கும் சிவத்த முகமெங்கே?
சிந்திக்க வைத்த சிறந்த பேச்செங்கே?
சொந்தமொடு பந்தமொன்று சேரும் உறவெங்கே
அந்தகன் வந்து உம்மை அணைத்த செய்தி
கேட்டு வாடுகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவர் தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலினைத் தெரிவித்து கொள்கின்றோம்.

(1239)

பிரிவுத் துயரில் பங்கு கொள்ளும்
யாழ்ப்பாண மருத்துவ பிரதிநிதிகள் சங்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கிலுள்ள சில மனிதப்புதைகுழிகள் வதந்திகளை அடிப்படையாகக் கொண்டவை

## நீதி அமைச்சரின் சர்ச்சைக்குரிய அறிவிப்பு



**(கொழும்பு)**
**வடக்கில் உள்ள பல மனிதப் புதைகுழிகள் குறித்து வெளியிடப்பட்ட தகவல்கள் வதந்திகளை அடிப்படையாகக் கொண்டவை என நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், சரியான தகவல்கள் இல்லாமல் அரசாங்கம் மனிதப் புதைகுழிகள் மீது நடவடிக்கை எடுக்கத் தயாராக இல்லை என்றும் நீதி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

மண்டைதீவில் உள்ள மனிதப் புதைகுழிகள் குறித்து வெளியிடப்படும் தகவல்கள் வதந்திகளை மட்டுமே அடிப்படையாகக் கொண்டவை.

இருப்பினும், திருக்கேதீஸ்வரத்தில் இருந்து கண்டு பிடிக்கப்பட்ட மனித உடல் பாகங்கள் "கார்பன் டேட் டிங்" சோதனைகளுக்காக "புளோரிடா"விற்கு அனுப்பப்பட உள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். (நி)

## சு.க மீண்டும் சந்திரிக்கா வசம்


(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மீண்டும் பொறுப்பேற்றுக் கட்டியெழுப்புமாறு, சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவிடம் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கோரிக்கை விடுத்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன் அடிப்படையில் 1994 ஆம் ஆண்டு முதல் 2005 ஆம் ஆண்டு வரை, தாம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராகப் பதவி வகித்த காலத்தில், அதனை எதிர்த்துத் தொடரப்பட்ட வழக்குகளை மீளப் பெறுமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## இலங்கை – பிரான்ஸ்

# வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தம் கைச்சாத்து



(கொழும்பு)


இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசுக்கும் பிரெஞ்சு குடியரசுக்கும் இடையிலான வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு நடவடிக்கையின் கீழ், இரு தரப்பு ஒப்பந்தத்தில் அதிகார பூர்வமாக கையொப்பமிடப்பட்டது.

இந்த ஒப்பந்தம், இலங்கையின் வெளிநாட்டு கடன் மறு சீரமைப்பு செயற்திட்டத்தில் ஒரு முக்கியமான முன்னேற்றமாக கருதப்படுகிறது. இது, கடன் நிலைத்தன்மையை மீட்டெடுத்து, நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்பும் அரசாங்கத்தின் உறுதியை வலியுறுத்துகிறது.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பை வழிநடத்துவதில் ஜப்பான் மற்றும் இந்தியாவுடன் இணைந்து, பிரான்ஸ் முக்கிய பங்கு வகித்து வருகிறது. அதன் தலைமையும், அர்ப்பணிப்பும், பயனுள்ள ஒத்துழைப்பும், இலங்கை எதிர் கொண்டு வரும் பொருளாதார சவால்களை சமாளிக்க உதவியுள்ளன.

இருதரப்பு ஒப்பந்தத்தில், இலங்கை அரசாங்கத்திற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கே. எம். மஹிந்தா சிறிவர்தன மற்றும் பிரான்ஸ் அரசாங்கத்திற்காக திறைசேரியின் பணிப்பாளர் நாயகம் மற்றும் பலதரப்பு விவகாரங்கள், வர்த்தகம் மற்றும் மேம்பாட்டுக் கொள்கைத் துறையின் உதவிச் செயலாளர் வில்லியம் ரூஸ் ஆகியோர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கொழும்பில் கையொப்பமிட்டனர். இந்த ஒப்பந்தம், இரு நாடுகளுக்கிடையிலான நீண்டகால நெருக்கமான உறவுகளை மேலும் வலுப்படுத்தும் ஒரு புதிய அத்தியாயமாகும். (நி)

## போதிய நேரம் வழங்கப்படாததால் வெளிநடப்பு செய்த எதிர்க்கட்சிகள்



(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்தி உட்பட எதிர்கட்சி உறுப்பினர்கள் சிலர் பாராளுமன்றத்திலிருந்து வெளிநடப்பு செய்துள்ளனர்.

ஈரானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள பதற்றமான சூழ்நிலை குறித்து உரையாற்ற பாராளுமன்றில் போதிய நேரம் வழங்கப்படவில்லை எனத் தெரிவித்தே ஐக்கிய மக்கள் சக்தி உட்பட எதிர்கட்சி உறுப்பினர்கள் சிலர் பாராளுமன்றத்திலிருந்து வெளிநடப்பு செய்துள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (நி)

# அடுத்த ஆண்டு முதல் புதிய பாடத்திட்டம்

## பிரதமர் ஹரிணி தெரிவிப்பு



(கொழும்பு)

2026 ஆம் ஆண்டிலிருந்து 1 முதல் 6 ஆம் வகுப்பு வரை புதிய பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்படும் எனப் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

மேலும் 2028 ஆம் ஆண்டு முதல் 10 ஆம் வகுப்புக்கும் புதிய பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.

அதன்படி 2029 ஆம் ஆண்டுக்கான க.பொ.த சாதாரண தரப் பரீட்சைகள் புதிய பாடத்திட்டத்தின் கீழ் நடைபெறும் எனப் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார். (நி)

# கைவிடப்பட்ட முதியவர்கள் தொடர்பில் தகவல் வழங்க புதிய இலக்கம்

(கொழும்பு)

பிள்ளைகளால் புறக்கணிக்கப்பட்டு, தங்குமிடம் தேவைப்படும் முதியவர்கள் குறித்த தகவல்களை வழங்குவதற்காக முதியோருக்கான தேசிய செயலகம் வட்ஸ்-அப் இலக்கமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

அதன்படி, அவ்வாறான முதியவர்கள் தொடர்பில் 070 789 88 89 என்ற வட்ஸ்-அப் இலக்கத்திற்குத் தகவல்களை வழங்கமுடியும்.

ஐக்கிய நாடுகள் சபை ஆண்டுதோறும் ஜூன் மாதம் 15 ஆம் திகதியினை உலக முதியோர் துஷ்பிரயோக விழிப்புணர்வு தினமாக அறிவித்துள்ளது.

இதற்கமைய, முதியோருக்கான தேசிய செயலகம் இந்த திட்டத்தினை ஆரம்பித்துள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## இந்தியா- இலங்கை போட்டியுடன் மகளிர் உலகக் கிண்ணம் ஆரம்பம்



சர்வதேச மகளிர் கிரிக்கட் அரங்கில் ஐ.சி.சி மகளிர் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியின் 13ஆவது அத்தியாயம் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் பெங்களூருவில் செப்ரெம்பர் 30ஆம் திகதி நடைபெறவுள்ள ஆரம்பப் போட்டியுடன் தொடங்கவுள்ளது.

மகளிர் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் பங்குபற்றுவதன் காரணமாக இந்த வருட ஐ.சி.சி மகளிர் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியை இந்தியாவிலும் இலங்கையிலும் நடத்த ஐ.சி.சி தீர்மானித்துள்ளது.

இந்த வருடம் ஐ.சி.சி மகளிர் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் நடப்பு சம்பியன் அவுஸ்திரேலியா, பங்களாதேஷ், இங்கிலாந்து, இந்தியா, நியூஸிலாந்து, பாகிஸ்தான், தென் ஆபிரிக்கா, இலங்கை ஆகிய எட்டு அணிகள் பங்குபற்றுகின்றன.

இந்த எட்டு அணிகளும் ஒரே குழுவில் ஒன்றையொன்று எதிர்த்தாடும் வகையில் மகளிர் உலகக் கிண்ணம் நடத்தப்படுவதால் இலங்கையில் 11 போட்டிகள் நடைபெறவுள்ளன.

இலங்கை தனது ஆரம்பப் போட்டியில் இந்தியாவை பெங்களூரிலும் 3 ஆவது போட்டியில் இங்கிலாந்தை குவாட்டியிலும் சந்திக்கும்.

மற்றைய 5 அணிகளை இலங்கை தனது சொந்த மண்ணில் எதிர்த்தாடும் இதேவேளை, பாகிஸ்தான் சம்பந்தப்பட்ட ஏழு போட்டிகளும் கொழும்பில் நடைபெறும். (3)

## இந்தியா- இங்கிலாந்து டெஸ்ட் தொடர் ஸ்டெய்னின் கணிப்பு உண்மையாகுமா?



இங்கிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது.

இதன்படி குறித்த இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி நாளை மறு தினம் வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளது.

இந்திய அணியின் முன்னணி வீரர்களான ரோஹித் சர்மா மற்றும் விராட்கோலி ஆகியோர் டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வினை அறிவித்துள்ள நிலையில், சுப்மன் கில் இந்திய அணியை வழிநடத்தவுள்ளார்.

இந்தநிலையில் இங்கிலாந்து அணி இந்த தொடரை 3-2 என கைப்பற்றுவதற்கு வாய்ப்புள்ளதாக தென்னாபிரிக்க அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளரான டேல் ஸ்டெய்ன் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் இத்தொடரின் ஒவ்வொரு போட்டியும் சவால் நிறைந்ததாக இருக்கும் எனவும், எந்த ஒரு அணியும் வெற்றியை எளிதில் விட்டுக்கொடுக்காது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (3)

## கோலூன்றிப் பாய்தலில் 12 ஆவது தடவை உலகசாதனை

ஸ்டொக்ஹோமில் நடைபெற்ற டயமன்ட் லீக் போட்டியில் சுவீடனின் ஆர்மண்ட் டுப்லன்டிஸ் கோலூன்றிப் பாய்தல் உலக சாதனையை 12 ஆவது தடவையாகவும் முறியடித்துள்ளார்.

ஒலிம்பிக் சம்பியனான டுப்லன்டிஸ் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற போட்டியில் 6.28 மீற்றர் உயரம் பாய்ந்தே மீண்டும் ஒரு முறை தனது சொந்தச் சாதனையை முறியடித்ததோடு அந்தப் போட்டியிலும் வெற்றியீட்டினார்.

இதன்போது கடந்த பெப்ரவரியில் கிளாமொன்ட் பெரனிடில் நடைபெற்ற போட்டியில் அவர் 6.27 மீற்றர் உயரம் பாய்ந்து படைத்த சாதனையையே தற்போது முறியடித்தார்.

உலக சாதனையைப் படைத்த பின்னர் தனது மேற்சட்டையை கிழித்து மைதானத்தைச் சுற்றி ஓடி கொண்டாட்டத்தில் ஈடுபட்டார்.

டுப்லன்டிஸ் 2020 பெப்ரவரியிலேயே கோலூன்றிப் பாய்தலில் முதல் முறை உலக சாதனை படைத்தார். அப்போது 6.17 மீற்றர் பாய்ந்ததே சாதனையாக இருந்தது. (3)



## பாடசாலைகளுக்கிடையிலான தடகளப் போட்டி

### ஹாட்லிக் கல்லூரிக்குத் தங்கம்




வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வல்லுநர் போட்டியில் 1500 மீற்றர் ஓட்டத்தில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவன் எஸ்.விகாசன் தங்கப் பதக்கத்தை கைப்பற்றியுள்ளார்.

வடமராட்சி கல்வி வலய பாடசாலை களுக்கு இடையிலான மெய்வல்லுநர் போட்டிகள் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இதில் 18 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான 1500 மீற்றர் ஓட்டத்தில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவன் எஸ். விகாசன் தங்கப் பதக்கத்தையும், நெல்லியடி மத்திய கல்லூரி மாணவன் பி.டிதர்சன் வெள்ளிப் பதக்கத்தையும், சிதம்பரக் கல்லூரி மாணவன் பி.சந்தோஸ் வெண்கல பதக்கத்தையும் கைப்பற்றினர். (3-90)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# INVITATION FOR BIDS (IFB)
# IFB No : 2025/02
## VELANAI PRADESHIYA SABHA, VANGALAVADY JUNCTION ,VELANAI.

1. The **Chairman, Divisional Procurement Committee**, on behalf of the Velanai Pradeshiya Sabha Invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below.

   **"Bidders shall also register themselves with the Registrar of Public Contracts Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987 for the contracts exceed Rs.5 million,"**
4. Qualification' requirements are indicated in section 4 of the **Procurement document**. Additional details are provided in Schedule (Section 5) for SBD 3 Documents
5. Interested bidders may obtain further information from **address given below in 6** and inspect the Procurement documents at the same place on any working days from **2025-06-18 To 2025-07-01** during **09:00 hrs and 15:00 hrs.**
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Secretary, Velanai Pradeshiya Sabha, Vangalavady junction, Velanai. (T.P No: 021 221 1506, Fax No: 021 221 1506) **from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table below** upon payment of non-refundable fees as mentioned in the table below. The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the Secretary, Velanai Pradeshiya Sabha, Vangalavady junction, Velanai.**on or before 10.30 a.m as stated in table below.** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at **Conference Hall**, Velanai Pradeshiya Sabha, Vangalavady junction, Velanai. commencing at **11.00 A.M as stated in table below.**
9. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

| | | |
|---|---|---|
| | Document Issuing/Purchasing Period | From 2025-06-18 To 2025-07-01 |
| | Pre-Bid Conference | At 11.00 A.M on 2025-06-25 |
| | Closing and Opening of Bids | At 10.30 A.M on 2025-07-02 |

| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit | | Bid Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| NP/14/41(18)/02/CF/2024/02 | Improvement of Velanai Pradeshiya Sabha | 5.25 | 90 | C8 or above in Building Construction | 1500.00 | 52,550.00 | 15-10-2025 | 17-09-2025 |
| NP/14/41(18)/02/CF/2025/01 | Renovation of Sinthamanippillaiyar Kovil Veethy | 0.847 | 60 | C9 or above in Highway Construction | 1500.00 | 8474.00 | 17-09-2025 | 20-08-2025 |
| NP/14/41(18)/02/CF/2025/02 | Renovation of Varavu Veethy | 0.847 | 60 | C9 or above in Highway Construction | 1500.00 | 8474.00 | 17-09-2025 | 20-08-2025 |
| NP/14/41(18)/02/CF/2025/02 | Renovation of Panavidai Sivan Kovil Veethy | 0.847 | 60 | C9 or above in Highway Construction | 1500.00 | 8474.00 | 17-09-2025 | 20-08-2025 |

**Chairman, Divisional Procurement Committee (DPC)**
**Velanai Pradeshiya Sabha, Vangalavady junction, Velanai. 18.06.2025**

(C-3215)

# இராசிபலன்

18.06.2025
ஆனி 04, புதன்கிழமை
சப்தமி முற்பகல் 11.00 மணிவரை

புரட்டாதி முன்னிரவு 10.05 மணிவரை
சுப நேரம் 4.23-5.53 மணிவரை
இராகுகாலம் 11.53-1.23 மணிவரை
தேய்பிறை அட்டமி

சந்திராஷ்டமம் ,
ஆயிலயம் மகம்

வளவன்

**மேஷம்**
எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், காரிய அனுகூலம் உண்டு,போசண சுகமுண்டு.

**ரிஷபம்**
தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், அரசு வழியில் எதிர் பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு,வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மிதுனம்**
பூர்வீக சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு,மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவார்,கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள்.

**கடகம்**
வழிபாடு மகத்துவம் தரும், உடல் நலனில் அதிக அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், வேலைச்சுமை கூடும், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது.

**சிம்மம்**
சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்,

**கன்னி**
எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், உடல் நலனில் இருந்த பாதிப்புக்கள் அகலும், தன்னம்பிக்கை துளிர் விடும் நாள், போசண சுகமுண்டு, கௌரவமான நாள்.

**துலாம்**
தாழ்ந்த சுபாவமுண்டு, பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.

**விருச்சிகம்**
நண்பர்கள் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம் , செய்தொழிலில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்கள் செல்ல போட்ட திட்டங்கள் கைகூடும்,போசண சுகமுண்டு.

**தனுசு**
பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு,கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்,போசண சுகமுண்டு.

**மகரம்**
வீண் விவாதங்களை தவிர்ப்பது நல்லது. செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள் பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், நண்பர்கள் சந்திப்பால் பரவசம் அடைவீர்கள்.

**கும்பம்**
ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பால் நன்மையுண்டு, தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும் கற்பனை மிகுதியான நாள்.

**மீனம்**
எடுத்த காரியங்கள் நிறைவேற அதிக பிரயாசை காட்டும் நிலை ஏற்படலாம், உடல் நலனில் கவனம் தேவை, உறவினர்கள் விவகாரங்களில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது.

உன்னால் முடிந்தவரை உன் பணியை நன்றாகச் செய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போதைப்பொருள் வியாபாரி கைது!

(கரணவாய்)

பருத்தித்துறையைச் சுற்றியுள்ள பல பகுதிகளுக்கு ஐஸ், கேரள கஞ்சாவை விநியோகித்து வந்த போதைப்பொருள் வியாபாரி ஒருவர் நேற்று முன்தினம் காங்கேசன்துறை பிரிவுக் குற்றப் புலனாய்வுத் துறையின் ஊழல் சோதனைப் பிரிவால் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து சுமார் 12 கிராம் 40 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் கண்டு பிடிக்கப்பட்டது. சந்தேக நபர் பருத்தித்துறையில் வசிக் கும் 29 வயது இளைஞர் ஆவார். குறித்த சந்தேக நபர் சிறிது காலமாக இளைஞர் சமூகத்தைக் குறிவைத்து செயற்பட்டு வருகிறார். இந்த சந்தேக நபருடன் 24 மற்றும் 25 வயதுடைய இரண்டு இளைஞர்களும் ஐஸ் போதைப் பொருளை வைத்திருந்தபோது கைது செய்யப்பட்டனர்.

காங்கேசன்துறை மேற்கு பிரிவு காவல்துறை அதிகாரி கயான் பிரசன்னா மற்றும் காங்கேசன்துறை பிரிவு குற்றப்பிரிவின் பொறுப்பதிகாரி என்.சி.பி. நயநாதரா ஆகியோரின் மேற்பார்வையில் இந்தச் சோதனை நடவடிக்கை வெற்றிகரமாக மேற்கொள்ளப் பட்டது. சந்தேக நபர் தொடர்பான மேலதிக விசாரணைகள் பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (8-60)

## அரச உத்தியோகத்தர்களுக்கு விரைவில் AI பயிற்சி

(யாழ்ப்பாணம்)

வடக்கில் உள்ள அரச உத்தியோகத்தர்கள் ஏ.ஐ. தொழில்நுட்பத்தை கற்றுக்கொள்ளக் கூடியவாறான பயிற்சிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக வட மாகாண பிரதிப் பிரதம செயலாளர் செ.பிரணவநாதன் தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி அலகின் ஏற்பாட்டில் இரண்டு கற்கை நெறிகளையும் பூர்த்தி செய்த அலுவலர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை வடக்கு மாகாண பிரதம செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதன் போதே அவ்வாறு தெரிவித்தார். (8-33)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 200 | 300 | 200 | 300 |
| உருளைக்கிழங்கு | 200 | 190 | 180 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 500 | 600 | 600 | 650 | 800 |
| தக்காளி | 400 | 400 | 450 | 350 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 250 | 220 | 250 |
| கோவா | 500 | 500 | 600 | 400 | 600 |
| கரட் | 800 | 750 | 800 | 650 | 700 |
| பூசணி | 120 | 180 | 150 | 150 | 200 |
| புடோல் | 120 | 180 | 200 | 200 | 200 |
| வாழைக்காய் | 100 | 120 | 100 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 350 | 150-350 | 400 | 400 | 400 |
| பெரிய வெங்காயம் | 140 | 140 | 150 | 110 | 150 |
| பாகற்காய் | 600 | 500 | 700 | 600 | 800 |
| வெண்டக்காய் | 120 | 150 | 200 | 120 | 300 |
| கருணைக் கிழங்கு | 350 | 350 | 250 | 250 | 400 |
| பயற்றங்காய் | 400 | 350 | 300 | 280 | 200 |
| லீக்ஸ் | 350 | 400 | 300 | 350 | 500 |
| பீற்றூட் | 400 | 500 | 500 | 380 | 450 |
| கறிமிளகாய் | 600 | 700 | 700 | 520 | 800 |
| முருங்கைக்காய் | 1400 | 1200 | 1200 | 1300 | 1600 |
| போஞ்சி | 600 | 600 | 700 | 480 | 800 |
| கத்தரிதம்புள்ள | 200 | 150 | 300 | -- | 250 |
| கீரை - 1 பிடி | 80 | 30-70 | 150 | 100 | 100 |
| தேசிக்காய் | 300 | 300 | 400 | 300 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 220 | 150 | 100-170 | 140-180 |
| இராசவள்ளி | 600 | 550 | 600 | 500 | 600 |
| வெங்காயப்பூ | 800 | 400 | 600 | 600 | 600 |
| முள்ளங்கி | 200 | 150 | 200 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 50 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 70 | 100 | 80 | 80 |
| ஈரப்பலா | 150 | 150 | 100 | -- | 200 |


## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய மஹோற்சவம்எதிர்வரும்23 ஆம் திகதி திங்கட் கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம் பமாகித் தொடர்ந்து 10 தினங் கள் இடம்பெறவுள்ளன.

இம் மஹோற்சவ தினங்களில் 30 ஆம் திகதி திங்கட் கிழமை மாலை 6 மணிக்கு சப்பறத் திருவிழாவும் எதிர்வரும் ஜூலை 1 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 8.30 மணிக்கு இரதோற்சவமும், 2 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு தீர்த் தோற்சவமும் அன்று மாலை 6 மணிக்கு கொடி யிறக்கமும் இடம்பெற்று 3 ஆம் திகதி வியாழக் கிழமை மாலை 6 மணிக்கு பூங்காவன உற்சவத்துடன் நிறைவடையவுள்ளதென ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (3)

## 'சிலேடைச்செல்வம்' கவிதை நூல்வெளியீடு




(யாழ்ப்பாணம்)

பைந்தமிழ் செம்மல் நிர்மலா சிவராச சிங்கத்தின் இரட்டுற மொழிதல் பாடல்கள் அடங்கிய 'சிலேடைச் செல்வம்' என்னும் பாடல் தொகுப்புகள் அடங்கிய நூல் கடந்த ஞாயிற்றுக்கிழமை அல்வாய் ஆழ்வார்ப்பிள்ளை மண்டபத்தில் வெளியிடப் பட்டுள்ளது.

சிலேடை நயம் மிக்க 100 பாடல்கள் இந் நூலில் உள்ளடக்கடப்பட்டுள்ளது.

இது நூலாசிரியரின் எட்டாவது படைப்பாகும். இதில் அடங்கியுள்ள ஒவ்வொரு பாக்களும் தனித்துவமானவை.

'சிவந்திருக்கும் உக்கிரத்தால் தீண்டும் நிலைத்தால்

அவலமுறும் பூமி அழியும் - உவகை

எரிக்கும் சினத்தை எதற்கும் துணிந்த

நெருப்புக் கிணையாய் நினை"

எனும் பாடல் மூலம் , சினத்தை கட்டுப்படுத்தாவிடின் அது உன்னையும் அழித்து உலகத்தையும் அழித்து விடும் எனும் தத்துவத்தை தத்ரூபமாக கூறி யுள்ளார் . இவ்வாறே இதி லுள்ள ஒவ்வொரு பாடல்களும் சிறப்பு மிக்க வையாக காணப் படுகின்றன.அதற்கு ஏற்ப தத்ரூபமான படங்களும் அமைந்து மேலும் மெரு கூட்டுகின்றன. (நி)

## மாற்றுத்திறனாளிகளுக்கான நடனப்போட்டி



(தருமபுரம்)

மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய கலாசார நிகழ்ச்சித் திட்டத்தின் "சித்ரூ 2025" நடனப்போட்டியில் கிளிநொச்சி மாவட்ட மாற்றுத்திறனாளிகள் தேசிய மட்ட போட்டிக்குத் தெரிவாகியுள்ளனர்.

மாற்றுத் திறனாளிகளுக்கான வடமாகாண ரீதியிலான நடனப்போட்டி கிளிநொச்சி மாவட்டசெயலகதிறன் விருத்தி மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

போட்டியில் வடமாகாணத்திலுள்ள ஐந்து மாவட்டங்களின் மாற்றுத் திறனாளிகள் குழுவினர் பங்குபற்றியிருந் தனர் நடனப்போட்டியை கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்கதிபர் நளாயினி இன்பராஜ் கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தார்.

வடமாகாண ரீதியிலான போட்டியில் கிளிநொச்சி மாவட்டம் முதலாம் இடத்தைப் பெற்று தேசிய மட்ட இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளது. இரண்டாம் இடத்தினை யாழ்ப்பாண மாவட்டமும், மூன்றாம் இடத்தினை வவுனியா மாவட்டமும் பெற்றுக்கொண்டது. (8-316)

## யாழ். மக்களின் வளர்ச்சிக்கு இந்தியா உறுதுணை துணைத்தூதுவர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மக்களின் நலனுக்கும் வளர்ச்சிக்கும் இந்தியா தொடர்ந்து உறுதுணையாக இருக்கும் என யாழ். இந்தியத் துணைத் தூதுவர், யாழ் . மாநகர சபை முதல்வருக்குத் தெரிவித்துள்ளார்.

இந்தியத் துணைத் தூதுவர் சாய்முரளி யாழ்ப்பாண மாநகரசபை முதல்வர் திருமதி. மதிவதனி விவேகானந்தராஜாவை நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.



குறித்த சந்திப்பில் இந்திய அரசு ஆதரவு வழங்கும் திட்டங்கள் யாழ்ப்பாணம் மற்றும் வட மாகாணத்தில் எவ்வாறு செயற்படுகின்றன என்பதையும், அந்தப் பகுதிகளின் முன்னேற்றத்திற்கு மேலும் எவ்வாறு இணைந்து செயற்படலாம் என்பது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் யாழ்ப்பாணத்தில் செயற்படுத்த இருக்கும் எதிர்காலக் திட்டங்கள் தொடர்பில் முதல்வர் எடுத்துக் கூறினார். இதனை வரவேற்ற துணைத் தூதுவர் யாழ்ப்பாண மக்களின் நலனுக்கும் வளர்ச்சிக்கும் இந்தியா தொடர்ந்து உறுதுணையாக இருக்கும் என உறுதி அளித்தார்.(8-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லையில் காணி சுவீகரிப்பு பொது மக்களால் முறியடிப்பு!

**(நெளுக்குளம்)**
**முல்லைத்தீவில் மக்களின் காணிகளை சுவீகரிக்க எடுக்கப் பட்ட முயற்சி அப் பகுதி மக்களால் முறியடிக்கப்பட்டுள்ளது.**



முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் சிலாவத்தை பகுதியில் மக்களுக்கு சொந்தமானதாக அறிவிக்கப்பட்ட இரண்டு ஏக்கர் காணியில் கடற்படையினர் தளம் அமைத்துள்ளனர்.

இந்த காணி சுவீகரிப்பதற்கான அளவீட்டு பணிகள் நேற்று மேற்கொள்ள அதிகாரிகள் சென்ற நிலையில் மக்கள் மற்றும் காணியின் உரிமையாளர்கள் எதிர்ப்பினை தெரிவித்தமையினால் காணி அளவீட்டு பணிகள் இடைநிறுத்தி வைக்கப்பட்டன.

இது தொடர்பில் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளரினால் காணி உரிமையாளர்களுக்கு காணி சுவீகரிப்பு தொடர்பிலான கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கரைதுறைப்பற்று பிரதேச செயலக அதிகாரிகள், அரச நில அளவையாளர் கி.கிருஸ்ணராசா, சிலாவத்தை கிராம சேவையாளர் உள்ளிட்ட அதிகாரிகள் குறித்த இடத்திற்கு வருகை தந்த போது காணியின் உரிமையாளர்கள் மக்கள் ஒன்றிணைந்து தங்கள் எதிர்ப்பு நிலைப்பாட்டினை வெளிப்படுத்தியுள்ளார்கள். இதனால் காணி அளவீட்டுப் பணிகள் நிறுத்தி வைக்கப்பட்டன.

கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட சிலாவத்தை கிராமத்தில் சிலாவத்தை கடற்படை முகாம் 2009 ஆண்டு போருக்கு பின்னர் நீண்ட காலமாக அமைந்துள்ளது.

இந்த காணியானது நான்கு பேருக்கு சொந்தமான இரண்டு ஏக்கர் என பொது மக்கள் தெரிவித்துள்ளனர்.

1981 ஆம் ஆண்டு தொடக்கம் இந்த காணியில் தாங்கள் வசித்து வந்துள்ளதாகவும்



2004 ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தின் போது காணிக்கான ஆவணங்கள் அனைத்தும் அழிந்துள்ளதாகவும் அதன் பின்னர் தமக்கான எந்த ஆவணமும் இல்லாத நிலையில் 2009 ஆம் ஆண்டு போருக்குப் பின்னர் குறித்த காணியில் கடற்படையினர் முகாமமைத்து வசித்து வந்துள்ள நிலையில் இந்த காணியினை உரிய உரிமையாளர்களுக்கு வழங்கக் கோரி பல தடவைகள் கோரிக்கை விடுத்தும் எதுவும் பலனளிக்கவில்லை என பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர்.

இந்தக் காணியை சுவீகரிக்க உள்ளதாக வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் காணிக்கான அளவீட்டு பணிகள் நேற்று மேற்கொள்ளப்பட்ட நிலையில் மக்கள் எதிர்ப்பினை தொடர்ந்து பணிகள் இடைநிறுத்தப்பட்டன. (8)

## கிளிநொச்சி மாவட்டத்தின் விவசாயக்குழுக் கூட்டம்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் நடப்பாண்டுக்கான விவசாய குழுக் கூட்டம் நேற்று காலை 9.30மணிக்கு கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் தலைமையில், மாவட்ட செயலக மாநாடு மண்டபத்தில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ள சிறுபோக செய்கை தொடர்பாகவும் ஏனைய விவசாய துறைசார்ந்த பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் இக் கூட்டத்தில் முன்கொண்டு வரப்பட்டு விரிவாக ஆராயப்பட்டன.

அத்துடன் விவசாய அபிவிருத்திகள் தொடர்பில் துறைசார்ந்து தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்களும் கலந்துரையாடப்பட்டன.

இக் கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர்(காணி) பிரதேச செயலாளர்கள், கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர், நீர்ப்பாசன பொறியியலாளர், கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர், பிரதி மாகாண விவசாய பணிப்பாளர், நீர்ப்பாசன பொறியியலாளர்கள், துறைசார்ந்த பல்வேறு திணைக்களங்களின் அதிகாரிகள் மற்றும் விடயதான உத்தியோகத்தர்கள், விவசாய அமைப்புக்களின் அங்கத்தவர்கள், மாவட்ட விவசாய பிரிவின் உத்தியோகத்தர்கள் என பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டனர். (8-315-316)

## ஆனையிறவு உப்பு சந்தைக்கு வந்தது



(கண்டாவளை)

கிளிநொச்சி ஆனையிறவு உப்பளம் முழுமையாக அபிவிருத்தி செய்யும் போது 20,000 தொடக்கம் 22 ஆயிரம் மெற்றிக் தொன் உப்பினை உற்பத்தி செய்ய முடியும் என ஆனையிறவு உப்பளத்தினுடைய முகாமையாளர் விவேகானந்தன் சுஜந்தன் தெரிவித்துள்ளார்.

கடந்த 1990 களின் பின்னர் செயலிழந்து போன ஆனையிறவு உப்பளம் மீளவும் ஆரம்பிக்கப்பட்டு உப்பு உற்பத்திகள் நடைபெற்று வருகின்றன.

இங்கு உற்பத்தி செய்யும் உப்பு ரஜ லுனு என்ற பெயரில் பொதி செய்யப்பட்டிருந்தது. இதற்கு தமிழ் அரசியல்வாதிகள் எதிர்ப்பு வெளியிட்டதுடன் அதன் பெயரை மாற்றம் செய்யுமாறு கோரிக்கை விடுத்தனர்.

இதனை அடுத்து அரசாங்கத்தினால் குறித்த உப்பு ஆனையிறவு உப்பு என்ற பெயரில் பெயர் மாற்றம் செய்யப்பட்டு சந்தைக்கு விற்பனைக்கு விடப்பட்டுள்ளது

அந்த வகையில் கிளிநொச்சி பரந்தன் பகுதியில் அமைந்துள்ள சூப்பர் மார்க்கெட் மற்றும் கிளிநொச்சி நகரில் அமைந்துள்ள ஏனைய வர்த்தக நிலையங்களிலும் மக்கள் நுகர்வுக்காக ஆனையிறவு உப்பு என்ற பெயரில் பொதி செய்யப்பட்ட உப்பு நேற்று முன்தினம் உப்பளம் பொது முகாமையாளரால் விநியோகிக்கப்பட்டது

இதன் போது கருத்து தெரிவித்த உப்பளத்தின் முகாமையாளர் ஆனையிறவு உப்பளத்தின் கீழ் உள்ள 700 ஏக்கர் நிலப் பரப்பில் தற்போது 500 ஏக்கர் நிலப்பரப்பில் மாத்திரம் உப்பு உற்பத்தி செய்யப்படுவதாகவும் இதன் மூலம் 15 ஆயிரம் மெற்றிக் தொன் உப்பு அறுவடை செய்யக் கூடியதாக இருப்பதாகவும் எதிர்வரும் ஆண்டளவில் 700 ஏக்கர் நிலப்பரப்பிலும் 20 ஆயிரம் தொடக்கம் 22 ஆயிரம் மெற்றிக் தொன் உப்பினை உற்பத்தி செய்ய முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (8-315)

## புதிதாக அமைக்கப்பட்ட உணவகம் இனந்தெரியாதோரால் சேதம்!

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கனகபுரம் வீதியில் தற்காலிகமாக அமைக்கப்பட்ட உண வகம் ஒன்று இனந்தெரியாத நபர்களால் சேதமாக்கப்பட்டுள்ளது.

கனகபுரம் வீதியில் உணவகம் ஆரம்பிக்கும் நோக்குடன் குறித்த கடை அமைக்கப் பட்டிருந்தது.

இந் நிலையில் குறித்த கடையைத் திறப்பதற்கு திட்ட மிடப்பட்டிருந்த நிலையில் உணவகத்தின் கண்ணாடிகள் இனந் தெரியாத நபர்களால் சேதமாக்கப் பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட நபரால் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப் பட்டதைத் தொடர்ந்து குறித்த பகுதிக்கு நேரடியாகச் சென்று ஆய்வு செய்த பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (8)



கிளிநொச்சி உருத்திரபுரம் சிவநகர் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் வைரவிழா நிகழ்வுகள் பாடசாலையின் முதல்வர் சிவதர்சினி கிருசாந்தன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் ம.பற்றிக்நிரஞ்சன் கலந்து கொண்டார். குறித்த நிகழ்வில் ஏனைய பாடசாலைகளின் முதல்வர்கள், ஆசிரியர்கள், பாடசாலையின் பழைய மாணவர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

(படம்-தேவானந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## உணவுக்காக திரண்ட மக்கள் மீது துப்பாக்கிச்சூடு 38 பேரை கொன்று குவித்த இஸ்ரேல் இராணுவம்



(காசா)


உணவு மையங்களை அடைய முயற்சிக்கும் போது தினசரி துப்பாக்கிச் சூடுகளில் மக்கள் உயிரிழந்த வண்ணம் உள்ளனர்.

தெற்கு காசா பகுதியில் இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா ஆதரவுடன் செயற்படும் உணவு விநியோக மையங்களுக்கு அருகே நேற்று முன்தினம் இஸ்ரேலிய இராணுவத்தின் துப்பாக்கிச்சூட்டில் குறைந்தது 38 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர் என்று காசா சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மரணமடைந்தவர்களில் பெரும்பாலானோர் ராஃபா நகரத்திற்கு அருகிலுள்ள காசா மனிதாபிமான அறக்கட்டளை மையத்தை அடைய முயன்றபோது கொல்லப்பட்டனர் என்றும், சில பேர் அருகிலுள்ள கான் யூனிஸ் நகரின் புறநகரில் புதிதாக திறக்கப்பட்ட மையத்திற்குச் செல்லும் வழியில் சுடப்பட்டதாகவும் காசா சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலிய இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகள் வழியாக ஆயிரக்கணக்கான பாலஸ்தீனியர்கள் உணவு மையங்களை அடைய முயற்சிக்கும்போது தினசரி துப்பாக்கிச்சூடுகளில் மக்கள் உயிரிழந்த வண்ணம் உள்ளனர்.

இஸ்ரேலின் தொடர்ச்சியான இராணுவ நடவடிக்கை மற்றும் உதவிப் பொருட்கள் நுழைவதற்கான கட்டுப்பாடுகள், காசா பகுதியைப் பஞ்சத்தின் விளிம்பில் தள்ளியுள்ளதாக நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். (நி)



## ஈரானின் அரச வானொலி கட்டடத்தை தாக்கி அழித்த இஸ்ரேல்

ஈரானில் அரசு வானொலி மற்றும் தொலைக்காட்சி கட்டடம் தாக்கப்பட்டதாகவும், இதன் விளைவாக ஏராளமான



ஈரானிய பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டதாகவும் இந்தியாவில் உள்ள ஈரான் தூதரகம் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் இரவு, இந்திய ஈரான் தூதரகம் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "சில நிமிடங்களுக்கு முன்பு, ஒரு மிருகத்தனமான தாக்குதலில், சியோனிஸ்ட் குற்றவாளி ஆட்சி, ஈரானின் அரசு வானொலி மற்றும் தொலைக்காட்சி கட்டடத்தை குறிவைத்து, ஏராளமான ஈரானிய பத்திரிகையாளர்களைக் கொன்றுள்ளது.

அனைத்து சர்வதேச விதிமுறைகளையும் தெளிவாக மீறும் இந்த குற்றச் செயலை இந்தியாவில் உள்ள சுயாதீன ஊடகங்கள் கண்டிக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்" என்று தெரிவித்துள்ளது.

இதற்கிடையே செய்தி நேரலையின் போது வான் வழித் தாக்குதல் நிகழ்ந்த வீடியோ வைரலாகி வருகிறது. (நி)

## சைப்பிரஸ் நாட்டின் உயரிய விருது மோடிக்கு

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி டில்லியில் இருந்து புறப்பட்டு சைப்பிரஸ் நாட்டைச் சென்றடைந்தார்.

தலைநகர் நிகோசியாவில் உள்ள விமான நிலையத்தில் அவரை சைப்பிரஸ் ஜனாதிபதி கிறிஸ்டோடவுலிட்ஸ் வரவேற்றார்.

கடந்த 20 ஆண்டுகளில் சைப்பிரஸ் சென்ற முதலாவது இந்திய பிரதமர் மோடி ஆவார்.

சைப்பிரஸின் மிக உயர்ந்த விருதான கிராண்ட் கிராஸ் ஆப் தி ஆர்டர் ஆப் மாகாரியோஸ் III விருதை பிரதமர் மோடிக்கு அந்நாட்டு ஜனாதிபதி நிகோஸ் கிறிஸ்டோடவுலிட்ஸ் வழங்கி கௌரவித்தார். (நி)



## ஈரா... உல... எச்சரி...

(டெஹ்ரான்...
அணு ஆயுத...
தத்தில் இருந்...
வேண்டும் என்...
ளுமன்றக்குழு...
கிறது. அப்படி...
தேச அளவில்...
வெடிக்கும் எ...
எச்சரித்துள்ள...

ஈரான் அணு ஆயுதம் நோக்கி போகக்கூடாது என்றுதான் தாங்கள் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருப்பதாக அமெரிக்கா கூறி வருகிறது. ஆனால், அமெரிக்காவின் கூட்டாளியான இஸ்ரேலின் செயற்பாடுகள், ஈரானை அணு ஆயுதங்களை நோக்கி வேகமாக தள்ளியுள்ளது.

ஈரானின் தேசிய பாதுகாப்பு மற்றும் வெளியுறவுக் கொள்கைக் குழுவின் செய்தித் தொடர்பாளர், இப்ராஹிம் ரெஸாய் இது குறித்து கூறுகையில்,

"அணு ஆயுதப் பரவல் தடுப்பு ஒப்பந்தத்தில் இருந்து விலகுவது குறித்து நாங்கள் பரிசீலனை... றோம்.

பார... இது... மசோத... இருக்கி... எதிராக... அணுச... ஆளுந... வேற்றிய... பதிலடி எ... நாங்கள... வருகிறோ... வித்திரு...

யுரே... யங்கள... ஆண்டு... அணுச... நாட்டின்... குற்றச்... பது இது... யாகும். ஆயுதப்...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...னின் முடிவால்
# ...கிற்கே ஆபத்து!
## ...ரிக்கும் ஆய்வாளர்கள்

**...ான்)**

**...ுதப் பரவல் தடுப்பு ஒப்பந் ...ந்து ஈரான் வெளியேற ...ன்று, அந்நாட்டு பாரா ...ழு பரிந்துரை செய்திருக் ...டி மட்டும் நடந்தால், சர்வ ...ில் அணு ஆயுதப் போர் ... என்று ஆய்வாளர்கள் ...ளனர்.**





...னை செய்து வருகி...றோம்.

பாராளுமன்றத்தில் ...து தொடர்பான ...சோதா விவாதத்தில் ...ிருக்கிறது. ஈரானுக்கு ...திராக சர்வதேச அணுசக்தி முகமையின் ஆளுநர்கள் குழு நிறை...வேற்றிய தீர்மானத்திற்கு ...திலடி கொடுக்கும் விதத்தில் ...ாங்கள் இதை செய்து ...ருகிறோம்" என்று தெரி...வித்திருக்கிறார்.

யுரேனியத்தின் தட...ங்கள் கடந்த 20 ஆண்டுகளில் "சர்வதேச அணுசக்தி முகமை" ஒரு ...ாட்டின் மீது இப்படியான ...ற்றச்சாட்டுகளை வைப்...து இதுவே முதல் முறை...ாகும். அதாவது," அணு ஆயுதப் பரவல் 'தடுப்பு ஒப்பந்தத்தின் கீழ் ஈரான் தனது பாதுகாப்பை உறுதி செய்வதில் பல முறை தவறியிருக்கிறது. மட்டுமல்லாது ஈரானில் பல இடங்களில் யுரேனியத்தின் தடயங்கள் கண்டறியப்பட்டுள்ளன. இது குறித்து அந்நாடு நம்பகமான விளக்கங்களை அளிக்கத் தவறிவிட்டது.

2019 முதல், ஈரான் தனது அணுசக்தி திட்டங்களில் வெளிப்படைத் தன்மையை கடைபிடிக்கவில்லை. எனவே, அந்நாட்டின் அணுசக்தி பயன்பாடு, அமைதிக்கானது என்பதை எங்களால் உறுதி செய்ய முடியவில்லை. அணுசக்தி விடயங்களில் உடனடியாக, முழு அளவில் எங்களுடன் ஒத்துழைக்க வேண்டும்.

ஒருவேளை அப்படி செய்ய தவறினால், இந்த விடயத்தை ஐ.நா. பாதுகாப்பு கவுன் சிலுக்குப் பரிந்துரைக்க நேரிடும்" என்று தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஒரு நாட்டின் மீது சர்வதேச அணுசக்தி முகமை இப்படியான கறார் குற்றச்சாட்டுகளை முன்வைத்திருப்பது கடந்த 20 ஆண்டுகளில் இதுதான் முதல் முறை. இது ஈரானுக்கு கௌரவ பிரச்சினையாக மாறியிருக்கிறது. எனவேதான் ஈரான் அணு ஆயுதப் பரவல் தடுப்பு ஒப்பந்தத்திலிருந்து விலகும் முடிவை எடுத்திருக்கிறது.

இது மட்டும் நடந்தால் ஈரான் அணு ஆயுதத்தை உருவாக்குவதை யாராலும் தடுக்க முடியாது.

ஈரான் அணு ஆயுதம் உருவாக்கினால், மத்திய கிழக்கில் உள்ள சவுதி அரேபியா, துருக்கி, எகிப்து போன்ற மற்ற நாடுகளும் தங்கள் பாதுகாப்பிற்காக அணு ஆயுதம் தயாரிக்க தொடங்கும்.

வடகொரியா ஏற்கெனவே அணு ஆயுத பரவல் தடுப்பு ஒப்பந்தத்திலிருந்து விலகியுள்ளது. எனவேதான் அந்நாடு தற்போது கடுமையான பொருளாதார தடைகளை எதிர்கொண்டிருக்கிறது.

ஈரான் விலகினால், அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் மற்றும் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் ஆகியவை ஈரானின் மீது மேலும் கடுமையான பொருளாதாரத் தடைகளை விதிக்கக்கூடும்.

ஈரான் சர்வதேச சமூகத்தால் மேலும் தனிமைப்படுத்தப்படும்.

வெளியுறவுத்துறை உறவுகள் பாதிக்கப்பட்டு, சர்வதேச அரங்கில் அதன் செல்வாக்கு குறையும்.

மட்டுமல்லாது, ஈரான் அணுகுண்டை தயாரிக்கிறது என்று சொல்லி அமெரிக்காவே நேரடியாக தாக்குதலில் இறங்கும். இப்படியெல்லாம் நடந்தால் மத்திய கிழக்கு முழுவதும் பற்றி எரியும்.

இதனால் கச்சா எண்ணெய் விலை உயர்ந்து, பெட்ரோல், டீசல் வர்த்தகம் கடுமையாக பாதிக்கப்படும் என ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். (ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் தட்டுப்பாடு இல்லை அரசாங்கம் தெளிவூட்டல்

(கொழும்பு) ----------------

**எரிபொருள் தட்டுப்பாடு குறித்த போலிச் செய்திகளைக் கண்டு ஏமாற வேண்டாம் என்று எரிசக்தி அமைச்சு பொதுமக்களை வலியுறுத்துகிறது.**

மத்திய கிழக்கில் நிலவும் போர் சூழ்நிலை காரணமாக நாட்டில் பெட்ரோலிய தட்டுப்பாடு ஏற்படக் கூடும் என்று பல்வேறு தவறான செய்திகள் சமூக ஊடகங்களில் பரப்பப்படுவதை அவதானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சு ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இலங்கை பெட்ரோலியக் கூட்டுத்தாபனத்திடம் அடுத்த இரண்டு மாதங்களுக்குத் தேவை யான எரிபொருள் இருப்பு இருப்பதாகவும், முன்கூட்டியே ஆர்டர் செய்யப்பட்ட எரிபொருள் இருப்புகளைப் பெறுவதற்குத் தேவையான ஏற்பாடுகள் செய் யப் பட் டுள் ளதாகவும் அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1995- இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கி-பா-21
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: BSc, Senior QS
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: B/15661

பிறப்பு:1993-இந்து
நட்சத்திரம்:மிருகசீரிடம்
கி-பா-20
3இல்சூரி செவ்
உயரம்:5'2"
தகைமை/தொழில்-A/L, TO
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: B/15663

பிறப்பு:1988-இந்து
நட்சத்திரம்:அனுசம்
1இல்செவ்
உயரம்-5'8"
தகைமை/தொழில்: A/L,Rep
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15665

பிறப்பு: 1982- இந்து
நட்சத்திரம்:மிருகசீரிடம்
கி-பா-13 1/2
2இல்செவ்
உயரம்:5'8"
தகைமை/தொழில்-O/L,Business
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15666

பிறப்பு: 1992- இந்து
நட்சத்திரம்:பூரம்
8இல் செவ்
உயரம்:5'10"
தகைமை/தொழில்: O/L. சுயதொழில்
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15667

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு - 1991 - இந்து
நட்சத்திரம்: ரேவதி
7இல் செவ்
கிபா- 15
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: London.
எதிர்பார்ப்பு - வெளிநாடு UK மட்டும்.
தொ.இ: G/15030

பிறப்பு-1996-இந்து
நட்சத்திரம்:பரணி
கி.பா:17
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: O/L
எதிர்பார்ப்பு:வெளிநாடு
தொ.இ: G/12110

பிறப்பு -1996 - இந்து
நட்சத்திரம்: மூலம்
7இல்சூரிசெவ்
கி.பா: 26 3/4
உயரம்: 5'5"
தகைமை/தொழில் - MLT
எதிர்பார்ப்பு - உத்தியோகம்
தொ.இ: G/15327

பிறப்பு-1993-இந்து
நட்சத்திரம்: பரணி
7இல் செவ்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: தகுதியான வரன்
தொ.இ: G/14988

பிறப்பு:1998-இந்து
நட்சத்திரம்:அத்தம்
1இல் செவ்
கி.பா: 81
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: Bsc, Msc (following)
எதிர்பார்ப்பு: உத்தியோகம் .வெளிநாடு
தொ.இ: G/14902

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் 397

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



# உயர்ந்த நோக்கம்

நண்பர் ஒருவர் நடந்து சென்றுகொண்டிருந்தார். நானும் அவருடன் சென்றுகொண்டிருந்தேன். அவருடைய நடை இருக்கே, நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை குதிரைமாதிரி போய்க் கொண்டிருந்தார். "எப்போதுமே நீங்கள் இப்படித்தானா சார்?" என்றேன். "உயர்ந்த நோக்கத்தை நாடிச் செல்லக்கூடிய ஒரு மனிதன் பந்த பாசத்துக்கு அடிமைப்பட்டோ அல்லது வேறு காரணத்துக்காகவோ தான் போய்க்கொண்டிருந்த நோக்கத்தை மறந்து, பின்னாலே தான் நடந்து வந்த பாதையை திரும்பிப்பார்க்க முற்பட்டால், அவனுடைய முன்னேற்றம் தடைப்படும்.

அவனுடைய எண்ணமும் ஈடேறாமல் போய்விடும். என்று ஒரு விளக்கம் கொடுத்தார் அவர். "இது என்ன சார் விளக்கம்? என்றேன்

"பகவத் கீதை விளக்கம்" என்றார். அதோடு விடவில்லை. அதற்கான கதையையும் சொன்னார். நானும் கேட்டுக்கொண்டே அவர் கூட நடந்து போனேன். அவர் சொன்ன கதை இதுதான். பாரத யுத்தம் முடிந்தது.

பலராமனும் கிருஷ்ணனும் இந்த பூலோகத்தை விட்டு பரலோகத்துக்குப் போய் சேர்ந்துவிட்டார்கள்.

அர்ச்சுனன் ஒரு மாதிரியாக ஆகிவிட்டான். அவன் அதுவரைக்கும் கற்று வைத்திருந்த அஸ்திர சாஸ்திரத்தை யெல்லாம் மறந்தே போய் விட்டான். வியாச பகவான் பார்த்தார். அர்ச்சுனா! நீயும் உன்னுடைய சகோதரர்களும் இந்த மண்ணுலகுக்கு வந்த நோக்கம் முடிந்துவிட்டுது. அதனாலே தான் நீ கற்ற வித்தையெல்லாம் மறந்து விட்டாய் இனிமேல் இந்த நில உலகத்திலே உங்களுக்கு வேலை இல்லை. நீங்கள் புறப்படலாம் என்றார்.

அவருடைய உபதேசப்படி பாண்டவர்கள். பாஞ்சாலியோடு சொர்க்கத்தை நோக்கிப் புறப்பட்டார்கள். முறைப்படி இந்த புண்ணிய பூமியை வலம் வந்து மேருமலைக்கு வந்து சேர்ந்தார்கள்.

அங்கேயிருந்த மணல் வெளிக்கு வந்து சேர்ந்ததும். பாஞ்சாலி முதலிலே மாண்டு மண்ணுலே விழுந்தாள்.

"திரௌபதி மரணமடைந்த காரணம் என்ன?" என்று பீமன் கேட்கிறான் தருமரிடம் தருமர் பின்புறம் திரும்பாமலேயே பதில் சொன்னார்.

நம் ஐந்து பேரிலே அர்ச்சுனன் மேல் மட்டும் அவள் அலாதியான அன்பு வைத்திருந்தாள். அவளுடைய பாரபட்சம் அவளைக் கொன்றுவிட்டது அப்படி என்று சொல்லிக்கொண்டே தான் போகிற பாதையிலே முன்னேறிக்கொண்டே இருந்தார். கொஞ்ச நேரத்திலே சகாதேவன் மடிந்து விழுந்தான். "இதுக்கு என்ன காரணம்?" என்று பீமன் கேட்கிறான்.

"சாஸ்திர ஞானத்துலே எனக்கு நிகர் யாரும் இல்லை என்கிற கல்விச்செருக்கினாலே அவன் இறந்து போனான்" என்று விளக்கம் கொடுத்தார் தருமர். பின்புறம் திரும்பிப்பார்க்காமல் தன்னுடைய வழியிலேயே அவர் போய்க்கொண்டிருதார்.

அடுத்தபடியாக நகுலன் விழுந்தான். "அவனுக்கு, தான் மிகவும் அழகு என்கின்ற எண்ணம் உண்டு. தனது மேனியழகைப் பற்றிய அந்தத் தற்பெருமைதான் அவனை வீழ்த்திவிட்டது" என்று அதற்கு விளக்கம் கொடுக்கிறார் தருமர். தொடர்ந்து போய்க்கொண்டிருதார்.

கொஞ்ச நேரத்திலே அர்ச்சுனன் அடிப்பட்ட மான் போல மாண்டு போகிறான். இதையும் திரும்பிப் பார்க்காமலே தன்னைத் தொடர்ந்து வந்துகொண்டிருக்கிறார். பீமனிடம் அதற்கான காரணத்தைச் சொல்கிறார் தருமர். நடந்து முடிந்த பாரதப் போரிலே, சுத்த வீரர்களுடைய கடமையை மறந்துவிட்டான் இவன். தான் ஒருத்தனாகவே எதிரிகளை வீழ்த்தவேண்டும் எனறு நினைத்தான். அந்த வீராப்பு அவனை அழித்து விட்டது" என்றார். கொஞ்ச தூரத்திலே பீமனும் கீழே விழ ஆரம்பித்தான். "அண்ணனே எனக்கும் அழிவுகாலம் ஆரம்பமாகி விட்டது.

என்னுடைய சாவுக்கு என்ன காரணம்?" என்று மண்ணிலே விழுந்து உருண்டு கேட்டான் பீமன்.

"உன்னுடைய உடல் வலிமையைப் பற்றி உன் உனத்தோட காத்துக் கொண்டிருக்கிறான். இந்திரன் தருமரிடம் கேட்கிறான்.

"மடிந்த உன்னுடைய மனைவி. மாண்டு போன சகோதரர்கள் இவங்கள் எல்லாம் மண்ணிலே விழுந்தப்போது நீ திரும்பிக்கூட பார்க்காமலே தொடர்ந்து முன்னேறிக் கொண்டிருக்கிறதுக்கு என்ன காரணம்" என்று கேட்கிறான். அதற்க்கு தருமர் அமைதியாக பதில் சொல்கிறார்.

உயர்ந்த நோக்கத்தை நாடிச் செல்லும் ஒரு மனிதன், பந்த பாசத்துக்கு அடிமைப்பட்டோ, அல்லது வேறு காரணத்திற்காகவோ, தான் செல்லும் நோக்கத்தை மறந்து பின்னால், தான், நடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்க்க முற்பட்டால், அவனுடைய முன்னேற்றம் தடைப்படும். அவனுடைய எண்ணமும் ஈடேறாமல் போய்விடும். இதுதான் தருமரின் பதில். சிந்திக்க வேண்டிய ஒரு கருத்துதான் இது. இந்தக் காலத்திலே நம் ஆட்க்கள் யாராவது இப்படி, பின்னாடி வருபவர்களைத் திரும்பிப் பார்க்காமல், நேராக நடந்து போயக்கொண்டு இருந்தால்அவனுக்குப் பின்னால், அவனுக்குக் கடன் கொடுத்தவன் வந்து கொண்டிருக்கிறான் என்று அர்த்தம். ஒருநாள் எனக்கு முன்னாடிஎன்னுடைய சிநேகிதன் ஒருத்தன் என்னைத் திரும்பிப்பார்க்காமலே நேராக விறைப்பா போய்க்கொண்டிருந்தான்.

நான் ஓடிப் போய் அவன் கையைப் பிடித்துக்கொண்டு ஏண்டா இப்படி பயப்படுகின்றாய்? எனனிடம் நீ என்ன கடனா வாங்கி இருக்கிறாய்? என்று கேட்டேன். இப்பவும் அவன் பின்னாடி முகத்தைத் திருப்பாமலே பதில் சொன்னான். "உன்னிடம் நான் ஏதும் கடன் வாங்கவில்லை சரி, ஆனால் என்னிடம் கடன் வாங்கிய ஒருவன் இப்போது என் முன்னாடி போய்க்கொண்டிருக்கிறான். அவன் என் கண்ணிலேயிருந்து தப்பிச்சிப் போக கூடாதுஎன்றுதான் நான் கழுத்தைத் திருப்பாமலே முன்னேறிக் கொண்டிருக்கிறேன் என்று சொல்லிவிட்டு முன்னாடிபோகின்ற ஆசாமியைக் குறிபார்த்து நடந்து போகிறான். வேட்டைக்குப் போவது போல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெண்டி வெந்தய சாறுகள் நுண்பிளாஸ்ரிக்குகளை நீரிலிருந்து பிரித்தெடுக்கும் அதிசயம்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை, விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

விஞ்ஞானத்தின் அபரிவிதமான வளர்ச்சியில் பல நன்மைகளும் தீமைகளும் எமது வாழ்க்கையுடன் ஒன்றிணைந்ததாகவே கலந்திருக்கின்றன. அவ்வாறான கண்டுபிடிப்புக்களில் பிளாஸ்ரிக் பொருட்களும் ஒன்று. பிளாஸ்ரிக்கினாலான பொருட்களை நாம் விரும்பியோ விரும்பாமலோ பயன்படுத்தவேண்டிய அவசியமாகிவிட்டது. அனைத்திலும் பிளாஸ்ரிக்கின் பயன்பாடு அதிமுக்கியத்துவமாக மாறிவிட்டது.

பிளாஸ்ரிக்கின் பயன்பாடு எங்கும் எதிலும் என்றாகிவிட்ட நிலையில் அதனது பாவனைக்கு பிந்திய நிலை என்பது கழிவாக அதுவும், இலகுவில் உக்கமுடியாத கழிவாக எமது சுற்றுச்சூழலில் நீர்நிலைகளில் மண்ணில் விவசாய விளைநிலங்களில் தெருவோரங்களில் சிலவேளை தெருக்களில் கழிவுகளாக இலகுவில் பிரிந்தழியாத நிலையில் சுற்றுச்சூழலெங்கும் பரவி சூழலை மாசடைய வைத்திருக்கின்றது. தற்போதுள்ள நிலைமையில் சூழலை மாசடையவைக்கின்ற முக்கியமான காரணியாக பிளாஸ்ரிக்கின் பயன்பாடு மாறிவிட்டது. சொப்பிங் பைகள், உணவு சுற்றும் தாள்கள், போத்தில்கள், பைகள் என பலவகையான பிளாஸ்ரிக்கின் பயன்பாடுகள் அதிகரித்து விட்டது.

இவற்றினால் சுற்றுச்சூழல் மட்டும் பாதிக்கப்படவில்லை அதிலுள்ள உயிரினங்கள் மற்றும் விலங்குகளும் பாதிக்கப்படுகின்றன. இன்னும் இவை இலகுவில் பிரிந்தழியாத தன்மையுடையதாகையால் வருடக்கணக்கில் மண்ணினுள் நீர்நிலைகளுள் காணப்படுகின்றன. இவற்றினை எதேச்சையாக உணவாக்கும் கால் நடைகள் மீனினங்கள் மற்றும் வேறு விலங்குகள் அவற்றின் உணவுத்தொகுதிக்குள் தவறுதலாக சென்றாலும் பாரிய விளைவினை ஏற்படுத்தி விடுகின்றன.

பெரிய துணிக்கைகளாலான பிளாஸ்ரிக்குகளின் பாவனை இவ்வாறிருக்க கண்ணுக்கு தெரியாத நுண்பிளாஸ்ரிக்குகளைப் பற்றி பல செய்திகள் வந்தவண்ணம் உள்ளன. இவற்றின் பருமன் மிகவும் சிறியதாக இருப்பதனாலும் அவை நனோபிளாஸ்ரிக்குகளாக மேலும் சிறிய துணிக்கைகளாக நாம் பயன்படுத்தும் குடிநீரில் கலந்திருக்கின்றது.

இவற்றைப் பற்றிய அறிவின்மை காரணமாக தினமும் நாம் இவ்வாறான நுண்பிளாஸ்ரிக் துணிக்கைகள் கலந்துள்ள நீரை பருகுவதுடன் அதனை ஏனைய தேவைகளுக்கும் பயன்படுத்துகின்றோம். எமது உடலுக்குள் எமக்குத் தெரியாமலேயே நுண்பிளாஸ்ரிக் துணிக்கைகள் நீரோடு சென்று அவை செமியாமலேயே தங்கிவிடுகின்றன.


இந்த நிலைமையாலே பலவித நோய்கள் உண்டாவதாக அவதானிக்கப்பட்டதோடு இவற்றுக்கான காரணங்களும் முழுமையாக கண்டுபிடிக்கப்படவில்லை. நுண்பிளாஸ்ரிக்குகளின் பருமன் மிகவும் சிறியதானதால் அவற்றை வடிகட்டவும் அல்லது பிரித்தெடுப்பதும் இலகுவான காரியமல்ல. இவ்வாறான துணிக்கைகள் இருப்பதனை ஸ்கானிங் எலக்ரோன் நுணுக்குக் காட்டி மற்றும் பியூரியர் ஸ்கானிங் நுணுக்குக்காட்டிகள் மூலமே இலகுவாக கண்டு பிடிக்கலாம். ஆனால் இந்த வசதிகள் பெரிதளவில் அநேகமான இடங்களில் இல்லை.

ஆனால் அண்மைக்கால ஆய்வில் வெண்டிக்காயின் சாற்றினையும் வெந்தயத்தின் சாற்றினையும் கொண்ட கலவையினால் இவ்வாறான நுண்பிளாஸ்ரிக்குகள் நீரிலிருந்து பிரிக்கப்படுவதனை கண்டுபிடித்துள்ளார்கள். வெண்டிக்காயின் சாற்றில் இத்தகைய மகிமை இருப்பதனை எமது பாரம்பரிய மருத்துவம் தெரிந்து வைத்திருப்பதுடன் குறிப்பிட்ட சில நோய்களுக்கு வெண்டிக்காய் சாற்றை பரிந்துரைக்கவும் செய்கின்றது. அதேபோல வெந்தயத்தின் மகிமை பற்பல. அதனது மருத்துவ குணங்கள் சிறப்புக்குரியனவாகும்.

வெந்தயமில்லா கறியில்லை என கூறுவார்கள். இரு தாவரபாகங்களிலும் உள்ள சளியத்தன்மை நுண்பிளாஸ்ரிக்குகள் வீழ்படிவாவதற்கு அனுகூலமாயிருக்கின்றன. வெண்டி மற்றும் வெந்தய சாறுகளில் பொலிசக்கரைட்டுக்கள் அதிகளவில் காணப்படுவது மிகவும் சுலபமாக நுண்பிளாஸ்ரிக்குகளை கவர்ந்திழுத்து அவற்றை ஒன்றாக்கி வினைத்திறனாக வீழ்படிய உதவுகின்றன. இவ்விரு தாவர சாறுகள் மூலமாக 90சதவீதமான நுண்பிளாஸ்ரிக்குகள் நன்னீரிலிருந்து கடல்நீரிலிருந்து இன்னும் நிலத்தடிநீரிலிருந்து பிரித்தெடுக்க முடிகின்றதென ஆய்வுகள் தெரியப்படுத்தியிருக்கின்றன.

இந்த மாதிரியான இலகுவில் உயிரிசிதைவுறும் (Biodegradable) மற்றும் நஞ்சற்ற பதார்த்தம் நுண்பிளாஸ்ரிக்குகளை வீழ்படிய வைக்கின்றன என்பது விஞ்ஞான உலகுக்கு பெரும் நற்செய்தியாகும்.

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...



இயலாது என நினைக்கப்பட்ட இது போன்ற துணிக்கைகளை வீழ்படிய செய்ய விஞ்ஞான உலகம் இன்னமும் போராடிக்கொண்டே இருக்கின்றது. இந்த கண்டுபிடிப்பின் மூலம் நீரிலிருந்து நுண்பிளாஸ்ரிக்குகளை பிரித்தெடுக்கும் தொழில்நுட்பம் மேலும் வளர்ச்சியடைந்து வலுவுற்று மாற்றுவழிகளை பரிந்துரைப்பதன் மூலம் தனது இருப்பினை தக்க வைத்துக் கொள்ள முடியும்.

நுண்பிளாஸ்ரிக்குகள் பொலிஸ்ரைரீன் (polystyrene) மற்றும் பொலிஎதிலீன் (Polyethylene) ஆகிய துணிக்கைகளால் ஆக்கப்பட்டிருக்கின்றன. இவை எந்த காலத்திலும் மண்ணினுள் நீரினுள் உக்கலடைய மாட்டாதவை. எனவே இவையுள்ள நுண்பிளாஸ்ரிக்குகளை அதிகம் பயன்படுத்துவதனால் அவை பிரிந்தழியாது மண்ணினுள் நீரினுள் ஆண்டாண்டு காலமாக இருக்கச் செய்யும்.

ஆதலினால் பிளாஸ்ரிக்குகளின் பயன்பாட்டை சிறிது சிறிதாக இல்லாதொழிக்க முயற்சியெடுக்கப்பட்டுள்ளது. முன்னோடியாக வெளிநாடுகளில் உள்ள பல பல்கலைக்கழகங்களில் கல்லூரிகளில் பிளாஸ்ரீனை பயன்படுத்துவதற்கு கட்டுப்பாடு விதித்திருக்கின்றதுடன் பிளாஸ்ரிக்கு இல்லாத பிரதேசமாக வரையறையும் செய்திருக்கின்றார்கள்.

வெண்டி சாற்றில் விற்றமின் சீ, விற்றமின் கே மற்றும் ஏனைய விற்றமின்களும் உள்ளன. அதிலுள்ள பொலிசக்கரைட்டுக்கள், புரதங்கள், தாவரவேதியியல் பொருட்கள் நுண்பிளாஸ்ரிக்கு பதார்த்தங்களுடன் பல்வேறு பொறிமுறைகளில் இணைந்து விடுகின்றன. இதனால் நுண்பிளாஸ்ரிக்கு பதார்த்தங்கள் மேற்கூறிய வேதியியல் பகுதிகளுடன் ஒன்றிணைக்கப்படுவதனால் இலகுவில் பிரிக்கப்பட்டு விடுகின்றன. இவ்வாறான நிலைமையையே வெந்தயச் சாற்றிலும் காணப்படுகின்றன. இரண்டினையும் கலந்து தயாரிக்கப்பட்ட சாறுகள் தனித்துவமானவையாகவும் நீரில் கலந்துள்ள நுண்பிளாஸ்ரிக்குகளை வேறாக பிரித்தும் விடுகின்றன. இவ்வாறான அனுகூலங்கள் மிகவும் தனித்துவமானவையாகவும் இன்னும் பயனுள்ளதாகவும் இருப்பதனால் இவற்றை பயன்படுத்தி இலகுவில் பிரித்தெடுக்க முடியும். இது பற்றிய மேலதிக ஆய்வுகள் இன்னமும் முன்னெடுக்கப்படல் வேண்டும். அத்துடன் இவ்விரு தாவரங்கள் தவிர்ந்து வேறு தாவரங்களிலும் இவ்வாறான அனுகூலங்கள் இருக்கின்றனவா என்பதனையும் ஆய்வுகள் வெளிப்படுத்தல் வேண்டும். எமது பிரதேசத்து மூலிகைகளிலிருந்து நுண்பிளாஸ்ரிக்குகளை இலகுவாக பிரிக்கமுடியுமாயின் அது எமது மக்களின் சுகாதார மேம்பாட்டுக்கு மேலும் வலுச் சேர்க்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 801





"நான் வளர்த்த சகோதரி இப்பொழுது பழுவூர் இளையராணி அவளுடைய தீராத கோபத்திற்கு ஆளாக நான் விரும்பவில்லை"

"அவளுடைய தீராத கோபத்திற்கு நான் மட்டும் ஆளாகலாம் என்று எண்ணினாயாக்கும்! அட சண்டாளா!" என்று கூறி கரிகாலர் இடையிலிருந்த கத்தியை உருவினார்.

வந்தியத்தேவன் பயந்து போனான். ஆழ்வார்க்கடியானுடைய வாழ்வு அன்றோடு முடிந்தது என்றே எண்ணினான். மிக்க நயத்துடன் "ஐயா! இந்த வைஷ்ணவன் முதன் மந்திரியிடமிருந்து வந்திருக்கிறான். இவன் கொண்டு வந்த செய்தியைக் கேட்டுக் கொண்டு தண்டியுங்கள்!" என்றான்.

"ஆகா! இவனைத் தண்டித்து என்ன பிரயோஜனம்? இனி யாரைத் தண்டித்து என்ன பயன்?" என்று கூறிக் கரிகாலன் கத்தியை உறையில் போட்டான்.

கரிகாலன் கோபத்தைக் கண்டு வந்தியத்தேவன் பயந்தது போல் ஆழ்வார்க்கடியான் பயந்ததாகத் தெரியவில்லை. முகத்தில் விசித்திரமான புன்னகையுடன், "அரசே! தங்கள் கோபத்தை என் பேரில் திருப்புவீர்கள் என்று எண்ணித்தான் இத்தனை நாளும் தங்களை நான் நேரில் சந்திக்காமலிருந்தேன்.

என் பேரில் என் சகோதரி கொண்ட கோபமும் இன்னும் தீரவில்லை. இன்று வரையில் என்னைப் பார்ப்பதற்குப் பிடிவாதமாக மறுத்துக் கொண்டிருக்கிறாள். ஆனால் தங்கள் பேரில் அவளுடைய கோபம் தீர்ந்து விட்டதாகக் காண்கிறது. நந்தினி தேவியின் அன்பான திருமுக ஓலையைப் பார்த்து விட்டுத்தானே தாங்கள் கடம்பூர் அரண்மனைக்கு விருந்துக்குப் புறப்பட்டீர்கள்?" என்றான்.

"அரசே! சற்று முன் தாங்களே சொன்னீர்களே! தங்களுக்கு அன்று பிடித்திருந்த வெறியைப் பற்றி! எதிரில் கண்டவர்களையெல்லாம் வெட்டி வீழ்த்திக் கொண்டு போனீர்கள் சில காலம் நான் உயிர் வாழ விரும்பினேன்"

"அது மட்டுந்தானா காரணம்? 'அசரீரி வெளிவந்து எனக்கு வழிகாட்டட்டும்' என்று எவ்வளவோ முறை தொண்டை வலிக்கக் கூவினேனே? அப்போதும் நீ ஏன் வெளி வரவில்லை?"

"ஆகா! துஷ்ட வைஷ்ணவனே! அது உனக்கு எப்படித் தெரிந்தது?" என்று கரிகாலன் கேட்டான். "ஐயா! முதன் மந்திரி அநிருத்தன் பணியாளன் நான். முதன் மந்திரிக்குத் தெரியாமல் இந்தச் சோழ ராஜ்யத்தில் எந்தச் சிறிய காரியமும் நடக்க முடியாது!" என்றான் ஆழ்வார்க்கடியான்.

"பார்த்துக் கொண்டே இரு! ஒருநாள் அந்த அன்பில் அநிருத்தனையும் உன்னையும் சேர்த்துத் தேசப் பிரஷ்டம் செய்து விடுகிறேன்! இப்போது இருவரும் குதிரை மீது ஏறிக் கொள்ளுங்கள்! என் இரு பக்கத்திலும் வந்து கொண்டிருங்கள் பேசிக் கொண்டே போகலாம்" என்றான் ஆதித்த கரிகாலன்.

### 13 ஆம் அத்தியாயம் மணிமேகலையின் அந்தரங்கம்

கடம்பூர் மாளிகையின் விருந்தினர் பகுதியில், விசேஷமாக அலங்கரிக்கப்பட்டிருந்த அந்தப்புரத்து அறையில், சப்ரமஞ்சக் கட்டிலில் நந்தினி சாய்ந்து கொண்டிருந்தாள். அவளும் அன்றைக்கு மிக நன்றாக அலங்கரித்துக் கொண்டு விளங்கினாள். அவளுடைய முகம் என்றுமில்லாத எழிலுடன் அன்று திகழ்ந்தது.

(தொடரும்...)

## தொழிற்சங்க நடவடிக்கைக்கு தயாராகும் ரயில்வே காவலர்கள்

(கொழும்பு)

நீண்டகாலமாக தீர்க்கப்படாத நிர்வாகப் பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு, இந்த வாரம் 48 மணிநேர தொழிற்சங்கப் போராட்டத்தை ஆரம்பிக்கப் போவதாக இலங்கை ரயில்வே காவலர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. இந்தப் பிரச்சினைகள் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் சங்கம் குறிப்பிட்டுள்ளது. இதனால், ஜூன் 20 ஆம் திகதி வெள்ளிக் கிழமை நள்ளிரவு முதல் அடையாள வேலை நிறுத்தத்தைத் தொடங்கப் போவதாக சங்கம் கூறியுள்ளது. (நி)

லங்கா மஹறால் (PVT) LTD
உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.
இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.
இந்தியா தொடர்புகளுக்கு :
00919566156719
WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974
(354)

## ரூபாவின் பெறுமதி மேலும் வீழ்ச்சி!

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி கடந்த வெள்ளிக் கிழமையுடன் ஒப்பிடும் போது நேற்று மேலும் குறைந்துள்ளது. இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகபூர்வ நாணய மாற்று விபரங்களுக்கு அமைவாக, அமெரிக்க டொலர் ஒன்றுக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி இன்று 296.86 ரூபாவாகவும், 305.23 ரூபாவாகவும் உள்ளது.

நேற்று முன்தினம் திங்கட் கிழமை அமெரிக்க டொலர் ஒன்றுக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதியானது 295.75 ரூபாவாகவும், 304.05 ரூபாவாகவும் காணப்பட்டிருந்தது.

வளைகுடா நாணயங்கள் உட்பட வெளிநாட்டு நாணயங்களுக்கு நிகராகவும் இலங்கை ரூபாவின் பெறுமதி மேலும் சரிந்துள்ளது. (நி)



நாட்டுக்கு அதிர்ஷ்டத்தை வழங்கும் தேசிய லொத்தர் சபையானது உங்களை மென் மேலும் வெற்றியாளராக மாற்றும் நோக்கில் எங்கள் லொத்தர்களுக் கிடையில் புதிய உறுப்பினரை அறிமுகப்படுத்தும் நிகழ்வு 13.06.2025 அன்று நடைபெற்றது. நாள் இனியதாக அமையவும் உங்கள் கனவுகளை வெல்லவும் "சுப தவசக்" எனும் பெயரில் புதிய வழியில் லொத்தரிலே வெற்றி வாய்ப்புகளை அதிகரித்து உங்களை வெற்றியாளராக்குவதே தேசிய லொத்தர் சபையின் நோக்கமாகும். இந்த புதிய லொத்தரின் முதலாவது சீட்டிழுப்பானது விசேட சீட்டி ழுப்பாக 2025 யூலை மாதம் 09 ஆம் திகதி அன்று சீட்டிழுக்க தயாராகவுள்ளதுடன் இந்த புதிய லொத்தரின் சாதாரண பரிசுக் கட்டமைப்புக்கு மேலதிகமாக மோட்டார் வண்டி, எலெக்ரிக் மோட்டார் சைக்கிள்கள் உட்பட ஏராளமான மில்லியன் பரிசுகளை நீங்கள் வெல்ல சந்தர்ப்பங்கள் உள்ளன. யூலை 09 ஆம் திகதியிலிருந்து கிழமையில் 07 நாட்களும் உங்களை வெற்றியாளராக்க "சுப தவசக்" லொத்தரானது உங்களருகில் வருகின்றதென்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம். புதிய லொத்தரின் அறிமுக நிகழ்விலே போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறை முகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் திரு.பிமல் ரத் நாயக்க, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறை முகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் செயலாளர் சிரேஷ்ட பேராசிரியர் திரு.கபில சீ.கே. பெரேரா, தேசிய லொத்தர் சபையின் தலைவர்-திரு.எம்.டீ. சீ.ஏ.பெரேரா, பதில் பொது முகாமையாளர் சட்டத்தரணி திரு.சஞ்ஜீவ எதிரிசிங்க மற்றும் பிரதான நிதியியல் அதிகாரி திருமதி.ரீ.டீ.ரசிகா பிரபோதனி ஆகியோர் பங்கு பற்றி இருந்தனர்.

கண்ணீர் அஞ்சலி
கிளி/ பளை மத்திய கல்லூரியின்
ஆசிரியர் திரு.ஆ.கமலக்குமரன்
அவர்களின் அன்புத் தந்தையார்

அமரர்
மூத்ததம்பி
ஆனந்தகிருஷ்ணன்
அவர்கள் 15.06.2025 அன்று இறைபதம் அடைந்தமையிட்டு அவர் தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
தோற்றம் 10.04.1935
மறைவு 15.06.2025
ஊழியர் நலன்புரிச்சங்கம்
கிளி/ பளை மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை)
(C-3216)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையைக் கூறும்போது அது யாரைப் பாதிக்கின்றதெனப் பார்க்காதே.
– மகாத்மா காந்தி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## போரை நிறுத்த விரைந்து செயற்படுங்கள்

ஈரான் – இஸ்ரேல் யுத்தம் மிகப் பெரும் பேரழிவை ஏற்படுத்தப் போகிறது. தடுத்து நிறுத்த வேண்டிய உலக நாடுகள் போரை ஊக்குவிக்கின்றன.

ஆக, வாழ வேண்டிய மனித குலத்தைக் கொன்று குவிப்பதற்கு உலக நாடுகள் தயாராகிவிட்டன என்பது தெட்டத் தெளிவாகிறது.

இந்த நிலையில் ஈரான் மீது இஸ்ரேலும் இஸ்ரேல் மீது ஈரானும் நடத்துகின்ற ஏவுகணைத் தாக்குதல் இரண்டு நாடுகளையும் நிர்மூலமாக்குகின்றன.

இத்தாக்குதல்களால் மனித உயிர்கள் கொல்லப்பட, உலகில் பெருந் துயரம் மட்டுமே மிஞ்சப் போகிறது.

தவிர, இரண்டாம் உலகப் போருக்குப் பின்பாக நிறுவப்பட்ட ஐக்கிய நாடுகள் சபை, நாடுகளுக்கிடையே போர் ஏற்படுவதைத் தடுத்து அமைதியை நிலைநிறுத்துவதை நோக்காகக் கொண்டது.

ஆனால் எந்தப் போரையும் ஐ.நா சபை நிறுத்தியதான தகவல்கள் இல்லை.

உண்மையில் ஐ.நா சபையின் நோக்கம்; உலக அமைதியை ஏற்படுத்துவதாக இருந்தால், காஸா மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலை தடுத்து நிறுத்தியிருக்க வேண்டும். எனினும் ஐ.நா சபை அதைச் செய்யவில்லை.

அன்று அதைச் செய்யாததன் விளைவாகவே இப்போது இஸ்ரேல் – ஈரான் போர் மூகிழ்த்துள்ளது.

இப்போதுகூட இரண்டு நாடுகளிடையேயும் நடக்கின்ற யுத்தத்தை நிறுத்துகின்ற முயற்சிகளை ஐ.நா சபை முன்னெடுக்கலாம்.

என்ன செய்வது, ஐக்கிய நாடுகள் சபையும் வல்லாதிக்க நாடுகளின் கட்டுப்பாட்டுக்குள் இயங்குவதால் எதுவும் செய்ய முடியாத நிலைக்கு ஆளாகிவிட்டது.

எதுஎவ்வாறாயினும் அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகள் இஸ்ரேல் – ஈரான் போரை நிறுத்துகின்ற முயற்சியில் தீவிரமாக ஈடுபட வேண்டும்.

இதைவிடுத்து யுத்தம் நடந்து கொண்டிருக்கும்போது, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் யுத்தத்தில் ஈடுபட்டுள்ள ஒரு நாட்டுக்குச் சார்பாகச் செயற்பட்டால், அது மற்றைய நாட்டுக்கு மிகுந்த வலியைக் கொடுப்பதுடன் ஏனைய மத்திய கிழக்கு நாடுகளும் ஒன்றுசேரக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்திவிடும்.

இதையும் கடந்து நிலைமை மோசமாகினால், அணுவாயுதப் பிரயோகங்களும் அரங்கேறலாம்.

ஆக, அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் ஏலவே கூறியதுபோல, இஸ்ரேல் – ஈரான் யுத்தத்தை உடனடியாக முடிவுக்குக் கொண்டு வரும் தனது கடமையைச் செய்ய வேண்டும்.

மாறாக பக்கம் சார்ந்து கொண்டு சமாதானத்தை ஏற்படுத்துவதென்பது நடைமுறைச் சாத்தியமற்றது.

# கடந்த 76 வருடங்களாக தமிழ் இளைஞர்களின் திறமைக்கு உரிய அங்கீகாரம் கிட்டவில்லை

## நிலைமையை மாற்றிக்காட்டுவோம் என அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்குக் கிழக்கில் வாழும் தமிழ் இளைஞர்களின் திறமைக்கு உரிய அங்கீகாரம் கடந்த 76 வருடங்களாகப் புறக்கணிக்கப்படுகின்றது.

வடக்குக்கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் மட்டுமன்றி அங்குள்ள இளைஞர்களின் விளையாட்டு ஆற்றலை இனங்காண்பது தொடர்பிலும் கடந்த காலங்களில் அவதானம் செலுத்தப்படவில்லை எனக் கடற்தொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

நேற்றுப் பாராளுமன்றில் இது குறித்து மேலும் கருத்துரைத்த அவர்,

யாழ்ப்பாணத்தில் சர்வதேச மைதானம் மட்டுமல்ல சர்வதேச தரத்தில் உள்ளக விளையாட்டரங்கும் அமைக்கப்படவுள்ளது.

வடக்கு, கிழக்கில் விளையாட்டுத்துறையை மேம்படுத்துவதற்குரிய திட்டங்களை விளையாட்டுத்துறை அமைச்சர் வகுத்துள்ளார். இது விடயத்தில் அவர் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றார். அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சர் ஆகியோர் அடிக்கடி யாழ். மாவட்டத்துக்கு வருகின்றனர். விளையாட்டுக் கழகங்களைச் சந்தித்துக் கலந்துரையாடுகின்றனர். குறைகளைக் கேட்டறிந்து, அவற்றைத் தீர்த்து வைக்கின்றனர்.

கடந்த 76 ஆண்டுகளாக கண்டுகொள்ளப்படாத வடக்கு, கிழக்கு விளையாட்டுத்துறை பற்றித் தற்போது புதிய கோணத்தில் சிந்திக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணத்துக்கே உரிய தனித்துவமான சர்வதேச மைதானத்தை ஐந்தாண்டு காலப்பகுதிக்குள் அமைத்து, அங்கு சர்வதேச போட்டியையும் நடத்துவோம் என்றார். (ம-4,7)

### தொகுதிக் கிளை, மாவட்டக் கிளை என்ற பெயரில்

# கட்சித்தலைமை எட்டும் தீர்மானங்களை எவரேனும் மீறினால் கடும் நடவடிக்கை

## தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலர் சுமந்திரன் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி சபைகளில் நிர்வாகங்களை ஏற்படுத்துவது தொடர்பாகத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு எடுத்த முடிவுகளையே கட்சியின் தலைமைப்பீடம் நடைமுறைப்படுத்துகின்றது. கட்சித்தலைமையின் முடிவுகளுக்கு முரணாக கட்சியின் மாவட்டக் கிளை, தொகுதிக் கிளை என்ற பெயரில் உறுப்பினர்கள் செயற்பட்டாலோ, தீர்மானங்கள் மேற்கொண்டாலோ அவர்களுக்கு எதிராகக் கடும் ஒழுக்காற்று நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படும் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

உள்ளூராட்சி சபைகளில் நிர்வாகங்களை ஏற்படுத்துவது தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு இரண்டு தடவைகள் கூடி, விரிவாக ஆராய்ந்து தீர்மானங்களை எடுத்திருக்கின்றது. அந்தத் தீர்மானங்களே கட்சியின் முடிவுகள். அவற்றையே கட்சியின் தலைமைப்பீடமும் உறுப்பினர்களுக்கு அறிவித்துள்ளது. அவற்றையே கட்சியின் முடிவாகக் கருதி முன்னெடுக்க வேண்டியது கட்சி உறுப்பினர்களின் கடமையாகும் என்றுள்ளது. (ம-4,7)

# ஒருகொடவத்தை பகுதியில் தீ விபத்து

கொழும்பு கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஒருகொடவத்தைப் பகுதியில் குளிரூட்டி பழுதுபார்க்கும் நிறுவனத்தில் எரிவாயு கசிவின் காரணமாக நேற்று தீவிபத்து ஏற்பட்டுள்ளது.

பரவிய தீயைக் கட்டுப்படுத்துவதற்காக கொழும்பு மாநகர சபையின் 03 தீயணைப்பு வாகனங்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டபோதிலும் தீப்பரவல் காரணமாக அந்த நிறுவனம் முழுமையாக தீக்கிரையாகியுள்ளது.

எனினும் தெய்வாதீனமாக எதுவித உயிராபத்துக்களும் ஏற்படவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை கிராண்ட்பாஸ் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-4,7)

# தேவையான பெற்றோல் கையிருப்பில் உள்ளது

## யாழ்.மாவட்ட செயலர் பிரதீபன்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திற்கு சராசரியாக ஒரு நாளைக்கு ஒரு இலட்சத்து 15 ஆயிரம் லீற்றர் பெற்றோல் தேவை எனக் கணிக்கப்பட்ட நிலையில்நேற்று(17) எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு 2இலட்சத்து 64 ஆயிரம் லீற்றர் பெற்றோல் விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும்இன்று (18) எரிபொருள் நிலையங்களுக்கு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன வடபிராந்தியத்தினால் 2இலட்சத்து 50ஆயிரத்து 800 லீற்றர் பெற்றோல் விநியோகிக்கப்படவுள்ளதாகவும் யாழ்.மாவட்ட செயலர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்தார்.

ஆகவே பொதுமக்கள் பதற்றமடையத் தேவையில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-4,7,104)

# அதிக விலைக்கு மருந்து விற்பனை

## வைத்தியரும் பணியாளரும் கைது

அதிக விலைக்கு மருந்துகளை விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரின் ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியரும்பணியாளரும் இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் நேற்று செவ்வாய்க்கிழமை (17) கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பிரகாரமே சந்தேக நபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். (ம-4,7)

# தலையாழி ஞானவைரவராலய தேய்பிறை அஷ்டமி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கொக்குவில் தலையாழி ஞான வைரவர் ஆலயத்தில் தேய்பிறை அஷ்டமி உற்சவமானது இன்று புதன் கிழமை மாலை பக்தி பூர்வமாக இடம்பெறவுள்ளது.

அதன் பிரகாரம் வைரவப்பெருமானுக்கு விஷேட அபிஷேகம் இடம்பெற்றதனைத் தொடர்ந்து வசந்தமண்டபப் பூஜையும் சகஸ்ர நாம அர்ச்சனையும் நடைபெறவுள்ளது.

இதன்போது நெய் விளக்கேற்றி பக்தர்கள் வழிபாடாற்ற முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4,7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுச்சேரி பயணம் 08

புருசோத்தமன்



இரண்டாம் நாள் காலை நிகழ்வில் இளையோர் அரங்கைத் தொடர்ந்து வழக்காடு மன்றம் இடம்பெற்றது.

**சுக்ரீவனோடு வாலி பகை கொண்டது குற்றம்** என்பது வழக்கு.

வழக்காடு மன்றத்தின் நடுவர் பொறுப்பை மருத்துவர் சுதா சேஷய்யன் ஏற்றிருந்தார்.

வழக்கை கவிதா ஜவகர் முன்வைக்க ம.எழிலரசி அதனை மறுத்தார்.

வழக்காடு மன்றம் விறு விறுப்பாக நகர்ந்தது.

கவிதா ஜவகர் யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதரகத்தின் அழைப்பில் வருகைதந்து, யாழ்ப்பாணக் கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெற்ற பட்டிமன்றத்திற்கு நடுவராகப் பணியாற்றினார்.

அதனால் அவர் யாழ்ப்பாண மக்களுக்குப் பரீட்சையமானவர்.

வழக்கை மறுத்த எழிலரசி மேடைப் பேச்சை லாவகமாகக் கையாண்டார்.



நடுவர் மருத்துவர் சுதா ஷேசய்யன் கம்பராமாயணத்தில் மிகவும் புலமைமிக்கவர். ஒரு மருத்துவரிடம் இருந்த கம்பஇராமாயணப் புலமை கண்டு உண்மையிலேயே வியந்தேன்.

தவிர... இராமாயணத்தைப் பற்றியும் அவர் அங்கு கூறியமை வித்தியாசமாக இருந்தது. பொதுவில் வால்மீகி இராமாயணம், கம்பராமாயணம், துளசிதாசர் இராமாயணம் என அறிந்த எங்களுக்கு உலகில் 300 இற்கும் மேற்பட்ட இராமாயணக் காப்பியங்கள் இருப்பதான செய்தி ஆச்சரியத்திற்குரியதே.

மருத்துவர் சுதா சேஷய்யன் பல்கலைக்கழக மொன்றின் துணைவேந்தராக இருந்தவர் என்ற செய்தியும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இரண்டாம் நாள் மாலை நிகழ்வில் புதுச்சேரி மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர் நாராயணசாமியின் சிறப்புரையைத் தொடர்ந்து **கம்பன் போற்றும் மாண்பு** எனும் பொருளில் இராகு.கவிதைப்பித்தன் தலைமையில் கவியரங்கம் இடம்பெற்றது.

கவியரங்கத்தைத் தொடர்ந்து கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ் தலைமையில் பட்டிமன்றம்.

**ஒப்பற்ற தியாகம் செய்தவர்**

இந்திரஜித்தே! மாரீசனே! கும்பகர்ணனே! என்ற பட்டிமன்றத்தில் இந்திரஜித்தே என்ற அணியில் வாதிட்ட கம்பநேசன் வாசுதேவாவைத் தவிர ஏனைய பேச்சாளர்கள் இந்தியாவைச் சேர்ந்தவர்கள்.

புதுச்சேரிக் கம்பன் விழாவில் பட்டிமன்றம் இடம்பெற்று அங்கு வழங்கப்பட்ட தீர்ப்புக்கான மேன்முறையீடு மூன்றாம் நாள் விழாவில் இடம்பெறுவது வழமை.

அதேநேரம் பட்டிமன்றத்தில் நடுவரின் தீர்ப்பு என்பதற்கு மேலாக, நோக்கர்களின் தீர்ப்புக்கும் இடம் உண்டு. இந்த நடைமுறை கொழும்புக் கம்பன் விழாவிலும் பின்பற்றப்படுகிறது.

பட்டிமன்றம் ஆரம்பமாவதற்கு முன்னதாக 48 நோக்கர்கள் நியமிக்கப்படுவார்கள். இவர்கள் சபையில் இருந்து தெரிவு செய்யப்பட்ட சான்றாண்மை மிக்கவர்களாக இருப்பர்.

பட்டிமன்றத்தில் வாதப்பிரதிவாதங்களின் நிறைவில் நோக்கர்கள் வாக்களிப்பர்.

இங்கு வாக்களிப்பதென்பது ஓர் அணியை விலக்குவதாக இருக்கும்.

வாக்களிப்பதென்பது மிகவும் நேர்த்தியாக இடம் பெறுவதைப் பார்க்கும் போது, அந்த நிகழ்வின் முக்கியத் துவத்தை உணர முடியும்.

வாக்களிப்பு நிறைவுற்ற பின்னர், விசேடமாக நியமிக்கப்பட்ட மூவர் அடங்கிய குழு வாக்குகளை எண்ணி உரிய பதிவுகளைச் செய்வதுடன் நோக்கர்கள் யாரை நீக்கினார்கள் என்பதை அறிவிப்பார்கள்.

மேற்படி நோக்கர்களின் வாக்களிப்பில் ஒருவரின் வாக்கு செல்லுபடியற்றதாக, 41 நோக்கர்கள் ஒப்பற்ற தியாகி என்பதில் இருந்து மாரீசனை நீக்க வேண்டுமெனத் தீர்ப்பு வழங்க, ஆறு நோக்கர்கள் இந்திரஜித்தை நீக்க வேண்டும் என வாக்களித்திருந்தனர்.

ஈற்றில் மாரீசன் நீக்கப்பட, கும்பகர்ணன் - இந்திரஜித் ஆகிய இருவரில் ஒப்பற்ற தியாகி யார் என்பதை அறிவிக்கின்றபணி பட்டிமன்ற நடுவர் கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்களைச் சார்ந்ததாயிற்று.

இந்திரஜித்துக்காகப் பேசிய கம்பநேசன் வாசுதேவா மிகச் சிறப்பாக வாதிட்டதுடன் அவரின் வாதத்தை சபை இரசித்து மகிழ்ந்த போது, என் தோள் புயங்கள் உயர்ந்தன.

தீர்ப்பு உரையை ஆற்றிய கம்பவாரிதி, ஒப்பற்ற தியாகி என்பதிலிருந்து மாரீசனை நோக்கர்கள் நீக்கியமை சாலப்பொருத்துடையது எனக் கூறியதுடன், அதனை நியாயப்படுத்தும் வகையில் ஆழமான கருத்துக்களையும் முன் வைத்தார்.

ஈற்றில் கும்பகர்ணனையும் இந்திரஜித்தையும் ஒப்புவமை செய்து, ஒப்பற்ற தியாகி கும்பகர்ணன் எனத் தீர்ப்பு வழங்கியபோது சபை கரகோசம் செய்து ஆர்ப்பரித்தது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மயக்கமுற்ற...

உயிரிழந்துள்ளார்.

குறித்த இளைஞன் நேற்றுத் தனது வீட்டில் கேக் மற்றும் தேநீர் என்பன உட்கொண்ட சிறிது நேரத்தில் மயக்க முற்றுள்ளார்.

பின்னர் அவரை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றவேளை அங்கு உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார்.

உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காக சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ம-7,4,60,104)

## இரத்தவாந்தி...

இராமநாதன் முத்துலிங்கம் (வயது 62) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த குடும்பஸ்தர் கடந்த 15 ஆம் திகதி இரவு 10 மணியளவில் இரத்த வாந்தி எடுத்துள்ளார். பின்னர் 16ஆம் திகதி நெடுந்தீவு வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு, நேற்று 17ஆம் திகதி அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி அன்றைய தினமே உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார்.

உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காக சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ம-7,4,60,104)

## பருத்தித்துறை...

தில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தேவந்தினி பாபு தலைமையில் நடைபெற்றது.

15 உறுப்பினர்களைக் கொண்ட பருத்தித்துறை நகர சபைக்காக நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி 5 ஆசனங்களையும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி 4 ஆசனங்களையும் தேசிய மக்கள் சக்தி மற்றும் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி ஆகியன தலா 2 ஆசனங்களையும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி மற்றும் சுயேட்சைக் குழு ஆகியன தலா ஒரு ஆசனத்தையும் கைப்பற்றியது.

தவிசாளர் பதவிக்காக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில் போட்டியிட்ட வின்சன் டீ போல் டக்ளஸ் போலுக்கு 7 பேரும் இலங்கை தமிழ் அரசுக் கட்சி சார்பில் போட்டியிட்ட 4 பேரும் ஆதரவு வழங்கினர்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி வெளிநடப்புச் செய்ததுடன் தேசிய மக்கள் சக்தியின் இருவர் மற்றும் அர்ச்சுனா அணி ஆதரவு சுயேட்சைக் குழுவின் ஒருவர் வாக்கெடுப்பின்போது நடுநிலை வகித்தனர். (ம-7,4,33,60)

## கரவெட்டி பிரதேச...

ரியதோடு அதன் தவிசாளராக குமாரசாமி சுரேந்திரன் தெரிவானார்.

வடமராட்சி தென்மேற்கு (கரவெட்டி) பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் பிரதி தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை பிரதேச சபை சபா மண்டபத்தில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தேவந்தினி பாபு தலைமையில் நடைபெற்றது.

32 உறுப்பினர்களைக் கொண்ட வடமராட்சி தென்மேற்குப் பிரதேச சபைக்காக நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி 13 ஆசனங்களையும் தேசிய மக்கள் முன்னணி 7 ஆசனங்களையும் தேசிய மக்கள் சக்தி 6 ஆசனங்களையும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி 4 ஆசனங்களையும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி 2 ஆசனங்களையும் கைப்பற்றியது.

தவிசாளரைத் தெரிவு செய்வது பகிரங்க வாக்கெடுப்பா? அல்லது இரகசிய வாக்கெடுப்பா? என உள்ளூராட்சி ஆணையாளரால் கோரப்பட்டபோது இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி ஆகியன பகிரங்க வாக்கெடுப்பையும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி, தேசிய மக்கள் சக்தி ஆகியன இரகசிய வாக்கெடுப்பையும் கோரின.

இதன்படி இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

தேசிய மக்கள் சக்தி வாக்களிப்பில் பங்கேற்கவில்லை. ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் உறுப்பினர் ஒருவர் இரகசிய வாக்கெடுப்புக்கு எதிராக வெளிநடப்புச் செய்வதாக அறிவித்தார்.

32 உறுப்பினர்களில் 25 உறுப்பினர்கள் வாக்களிப்பில் பங்கேற்றதுடன் 7 பேர் பங்கேற்கவில்லை.

இலங்கை தமிழ் அரசுக் கட்சி சார்பில் போட்டியிட்ட குமாரசாமி சுரேந்திரன் 13 வாக்குகளையும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில் போட்டியிட்ட தம்பையா சிவராசா 12 வாக்குகளையும் பெற்றனர்.

இதனடிப்படையில் தவிசாளராக குமாரசாமி சுரேந்திரன் தெரிவாகினர்.

பின்னர் உப தவிசாளர் தெரிவு பகிரங்கமாக நடத்தப்பட்டது. இதில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி சார்பில் போட்டியிட்ட தியாகராசா தயாபரன் 14 வாக்குகளையும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில் போட்டியிட்ட கந்தன் பரஞ்சோதி 11 வாக்குகளையும் பெற்றனர்.

இறுதியில் இலங்கைத்தமிழ் அரசுக் கட்சியின் தியாகராசா தயாபரன் உப தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார். (ம-7,4,33,60)

## ஆட்சி...

பருத்தித்துறை பிரதேச சபையின் தவிசாளரை தெரிவு செய்வதற்கான கூட்டம் நேற்று பருத்தித்துறை பிரதேச சபை சபா மண்டபத்தில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தேவந்தினி பாபு தலைமையில் நடைபெற்றது.

20 உறுப்பினர்களைக் கொண்ட பருத்தித்துறை பிரதேச சபைக்காக நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி 9 ஆசனங்களையும் தேசிய மக்கள் சக்தி மற்றும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி ஆகியன தலா 4 ஆசனங்களையும் சுயேட்சை குழு 2 ஆசனங்களையும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி ஒரு ஆசனத்தையும் கைப்பற்றியது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சார்பில் முன்மொழியப்பட்ட உதய குமார் யுகதீஸ் தவிசாளராகவும் பிரதி தவிசாளராக முன்மொழியப்பட்ட கனகரத்தினம் ஸ்ரீகாந்தரூபனும் ஏக மனதாகத் தெரிவாகினர்.(ம-7,4,33,60)

## கிணற்றுக்குள்...

வர் உயிரிழந்துள்ளார்.

நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டில் ஆட்கள் இல்லாத நேரம் சிறுமி கிணற்றினை மூடி அடைக்கப்பட்டிருந்த வலை மீது இருந்து விளையாடியபோது வலை அறுந்து சிறுமி கிணற்றுக்குள் விழுந்து உயிரிழந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்த சிறுமியின் சடலம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில் மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,4,30)


மஹஜன சம்பத — திகதி 2025.06.17 — சீட்டிழுப்பு இலக்கம் 5863 — E 8 0 4 2 7 1 — அத சம்பத E 4 2 7 1 — சீட்டிழுப்பு இலக்கம் 438 — National Lotteries Board

தன நிதானய — திகதி - 2025.06.17 — சீட்டிழுப்பு இலக்கம் - 1893 — W 68 71 78 81 W — Double Chance 30619

மெகா பவர் — திகதி 17/06/2025 — சீட்டிழுப்பு இலக்கம் 2211 — G 18 32 42 53 65

ஜய — திகதி 2025.06.17 — சீட்டிழுப்பு இலக்கம் 0131 — L 5 9 1 2

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4105 — சீட்டிழுப்பு திகதி 17.06.2025 — H 18 27 37 55 — H — தேசிய லொத்தர் சபை

HANDAHANA உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2025.06.17 — சீட்டிழுப்பு இலக்கம் 1172 — விருச்சிகம் 12 33 43 58 விருச்சிகம் — 89916 — 32

உத்தியோகபூர்வ முடிவுகள் — 17.06.2025 — வெற்றி வாரம் 571 — P 1 3 9 0 5 2 — 90223 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.21,371,816.00 — DLB

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2837 — சீட்டிழுப்பு திகதி 2025.06.17 — தினம் செவ்வாய்க்கிழமை — 03 18 25 47 Z — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 68,889,113.60 — DLB

சனிதா — திகதி 17.06.2025 — வெற்றி வாரம் 4998 — 07 20 59 74 O — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 67,655,904.00 — ரூ. 50,000/- 88155 — DLB

சசிரி — வெற்றி வாரம் 706 — சீட்டிழுப்பு திகதி 17.06.2025 — செவ்வாய்க்கிழமை — 24 31 38 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ.2,000,000.00 — DLB

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4549 — சீட்டிழுப்பு திகதி 17.06.2025 — தினம் செவ்வாய்க்கிழமை — 11 29 30 62 கும்பம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,000,000.00 — 137229 — DLB

கப்ருக — ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — L 03 49 55 56 75 — 2013 — 17.06.2025 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.578,433,246.60 — DLB

அத கோடிபதி ADA KOTIPATHI — செவ்வாய்க்கிழமை — வெற்றி வாரம் 2663 — சீட்டிழுப்பு திகதி 2025.06.17 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.63,627,434.40 — 01 07 15 58 Z — 153711 — DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரயில்...

இதில் அரியாலை கேணியடியைச் சேர்ந்த த.சுதாகரன் (வயது-20) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார்.

யாழ்ப்பாண நொதேன் வைத்திய சாலையில் கடமைபுரியும் அவர் நேற்று செவ்வாய்க்கிழமை (17) மாலை 6.00 மணியளவில் புங்கங்குளம் பகுதியில் உள்ள புகையிரத தண்டவாளத்தில் இருந்துள்ளார்.

அச் சமயம் அநுராதபுரத்தில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற புகையிரதம் மோதியதில் அவர் உயிரிழந்துள்ளார்.

சடலம் யாழ். புகையிரத நிலையத்திற்கு எடுத்து வரப்பட்டது.

அங்கு சென்ற யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு அறிவுறுத்தினார். (ம-4,7,33,60)

## பெண்கள்...

மேற்கொண்டு வருகின்றனர்.

ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனியை இப்போதைக்கு நாங்கள் கொல்லப் போவதில்லை என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அயதுல்லா எங்கே இருக்கிறார் என்பது எங்களுக்கு சரியாகத் தெரியும். அவர் ஒரு எளிதான இலக்கு. அங்கு பாதுகாப்பாக இருக்கிறார்.

எங்கள் பொறுமை நலிந்து வருகிறது என ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.(ம-4,7)

## மண்டைதீவு...

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை (17) நடைபெற்ற அமர்வின் போது மண்டைதீவு செம்பாட்டுத் தோட்டம், புனித தோமையார் ஆலயத்தின் அருகாமை, திருக்கேதீஸ்வரம், முல்லைத்தீவு குமிழமுனை, கொக்குத்தொடுவாய், யாழ்ப்பாணம் செம்மணி சிந்துப்பாத்தி மனிதப் புதைகுழிகள் தொடர்பில் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்சன நாணயக்காரவின் கவனத்திற்கு கொண்டு வந்து கேள்வி எழுப்புகையில் மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றிய தாவது,

மண்டைதீவு செம்பாட்டுத்தோட்டம் தோமையார் தேவாலயப்பகுதியில் உள்ள மனிதப் புதைகுழியில், 1990 களில் வேலணை, மண்கும்பான், அல்லைப்பிட்டி, மண்டைதீவுப் பகுதிகளில் இருந்து அழைத்துவரப்பட்ட சிறுவர்களும் இளைஞர்களுமே புதைக்கப்பட்டார்கள் என வடக்கு மற்றும் கிழக்கு மனித உரிமை அமைப்புகள் குறிப்பிடுகின்றன.

3ஆம் வட்டாரம், மண்டைதீவைச் சேர்ந்த சூசைதாஸ் யேசுரட்ணம் தர்மராணி என்ற தாயார், தனது இரு பிள்ளைகள் உட்பட்ட 84 பேர் மண்டைதீவில் காணாமலாக்கப்பட்டுள்ளதாகவும், அதற்கான நீதியைப் பெற்றுத் தருமாறும் 2025.04.30 ஆம் திகதி ஜனாதிபதிக்கு ஒரு கடிதத்தை அனுப்பி, அதன் பிரதியை எனக்கும் கிடைக்கச் செய்துள்ளார்.

இப்பகுதியில் படுகொலை செய்யப்பட்டவர்களின் புகைப்படங்களுடன் வெளிவந்த அறிக்கைகள் உள்ளன. மண்கும்பான், அல்லைப்பிட்டி, மண்டைதீவுப் பகுதிகளில் இருந்து அழைத்துவரப்பட்ட சிறுவர்களும், இளைஞர்களுமே படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டார்கள்.

இவர்களை இராணுவத்தினர் அழைத்துச் சென்ற போது பெற்றோர், உறவினர்கள் அப்போது தீவுப்பகுதியில் இராணுவ ஒட்டுக்குழுவின் தலைவராகவிருந்த டக்ளஸ் தேவானந்தாவிடம் ஓடிச்சென்று அவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு மன்றாடியபோது இராணுவத்தினர் விசாரித்து விட்டு விடுவிப்பார்கள் என டக்ளஸ் கூறியுள்ளார்.

ஆனால் அவர்கள் எவரும் விடுவிக்கப்படாது படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டார்கள்.எனவே மண்டைதீவு செம்பாட்டுத்தோட்டம் தோமையார் தேவாலயப்பகுதியில் உள்ள மனிதப் புதைகுழி தொடர்பில் ஈ.பி.டி.பி.யின் செயலாளரும் முன்னாள் அமைச்சரும் இராணுவ ஒட்டுக் குழுத் தலைவருமாக இருந்தவரான டக்ளஸ் தேவானந்தாவிடம் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றார். (ம-4,7)

## யாழ்ப்பாணம்...

யாழ்ப்பாணம் பலாலி வீதியானது வசாவிளான் சந்தியில் இருந்து பருத்தித்துறை - பொன்னாலை வீதி வரையிலான சுமார் 2 கிலோ மீற்றர் தூரம் பலாலி உயர்பாதுகாப்பு வலயத்தினுள் காணப்பட்ட நிலையில், கடந்த சில மாதங்களுக்கு முன்னர் குறித்த வீதியானது காலை 6 மணி முதல் மாலை 5 மணி வரை மக்களின் போக்குவரத்திற்காகத் திறந்து விடப்பட்டது.

இந்நிலையில் குறித்த வீதியின் ஊடாக வேலைகளுக்குச் சென்று வருபவர்கள் மாலை 05 மணிக்கு பாதை பூட்டப்படுவதால் பலத்த சிரமங்களுக்கு மத்தியில் மாற்றுப் பாதையூடாக பயணித்து வந்தனர்.

இந்நிலையிலேயே ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற பாதுகாப்பு அமைச்சின் கூட்டத்தில் வேலைக்கு போய் வருவோரின் நலன் கருதி வீதியினை இரவு 07 மணி வரைக்கும் திறக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன் கோரிக்கையை முன்வைத்தார்.

அதனை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி குறித்த வீதியினை இரவு 07 மணி வரையில் திறக்குமாறு இராணுவத்தினருக்கு பணித்துள்ளார் என்றார். (ம-4,7,30,33)

## கொழும்பு மாநகர சபை உறுப்பினர் மீது தாக்குதல்

(கொழும்பு)

கொழும்பு மாநகர சபையின் உறுப்பினர் சந்தமாலி உலுவிடகே மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதலில் காயமடைந்தவர் சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாநகர சபை உறுப்பினரே தாக்குதலில் காயமடைந்தவராவார்.(ம-4,7)

## முன்னாள்...

தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், சமகால அரசாங்கத்தால் பொது மக்களுக்கு முன்வைத்துள்ள "வளமான நாடு அழகான வாழ்வு" கொள்கைப் பிரகடனத்தின் பிரகாரம், முன்னாள் ஜனாதிபதிகளுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் வழங்கப்பட்டுள்ள விசேட சிறப்புரிமைகளை இரத்துச் செய்வதற்காகவும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு 05 வருடங்களுக்குப் பின்னர் வழங்கப்படும் ஓய்வூதியத்தை இரத்துச் செய்வதற்கும் மக்கள் ஆணை வழங்கியுள்ளனர்.


இவற்றை இரத்துச்செய்யும் வகையில் 1986 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க ஜனாதிபதியின் உரித்துக்கள் சட்டம் மற்றும் 1977 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பாராளுமன்ற ஓய்வூதியச் சட்டங்களை இரத்துச் செய்வதற்காக 02 சட்டமூலங்களைத் தயாரிப்பதற்கு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரவை பத்திரத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்றார். (ம-4,7)

## மரண அறிவித்தல்

தோற்றம்
07 - 04 - 1947

மறைவு
13 - 06 - 2025



### சுப்பிரமணியம் சிவபாலன்
### (சிப்பால் மாஸ்ரர்)

கொக்குவில் கிழக்கு கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கு குளப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சிவபாலன் (சிப்பால் மாஸ்ரர், சோதிடர், ஓய்வு நிலை தபால் ஊழியர்) அவர்கள் கடந்த (13.06.2025) வெள்ளிக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னையா - பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் வசந்தகுமாரி அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற தேவபாலன் மற்றும் சந்திரவதனி ஆகியோரின் அன்புச் சகோதரரும் அரியதாஸ், மீனா (கனடா), ரஞ்சினி, கமலா ஆகியோரின் அன்பு மைத்துனரும் குகதாஸ், மகேஸ்வரி (கனடா), சண்முகராசா ஆகியோரின் அன்புச் சகலனும் துசியந்தி, துளசிதாசன், சபிதா, கோபி, கயன், வினோ, கௌசி, தரணியா ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும் கிருபாகரன், பிரபாகரன், வாசுகி, தேவகி, சுதாகரன், கார்த்திகா, அனித்தா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.06.2025) வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொக்குவில் கிழக்கு,
குளப்பிட்டி.

தகவல்:
குடும்பத்தினர்

(4561)


விற்பனையாளர் தேவை (பெண்)

யாழ். நகரில் இயங்கும் ஜவுளி நிறுவனத்திற்கு பழகிய அல்லது பழக ஆர்வம் உள்ள பெண் விற்பனையாளர் தேவை.

சிவகணேசன் TEX
41, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம். (4567)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம். நெல்லியடி. பருத்தித்துறை. சாவகச்சேரி. கொடிகாமம். கிளிநொச்சி. மானிப்பாய். சுன்னாகம். அச்சுவேலி. சங்கானை. வல்வெட்டித்துறை. உடுப்பிட்டி. காரைநகர். வவுனியா. மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-3218)

076 825 7716 (ஆகாஸ்)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS

எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம்
• சாவகச்சேரி • மானிப்பாய்
• நெல்லியடி • பருத்தித்துறை
• திருகோணமலை • வல்வெட்டித்துறை
• கோப்பாய் • புத்தூர்
• பண்டத்தரிப்பு • சங்கானை
• கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com
(C-3219)

கனடா - வரி இல்லாமல்
விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3970/-
11-16 Kg 2800/-
21-30 Kg 2640/-

குறைந்த விலை - நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery

UK 11Kg - 1420/- | France 11Kg - 2220/- | Germany 11Kg - 2020/-
Swiss 11Kg - 2510/- | Australia 11Kg - 1980/- | Italy 11Kg - 2250/-

எமது நேரடி கிளைகள்
கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 076 822 6237 (C-3219)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.06.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org